Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நிலவு.com வெளியீடுகள்
இதயம் குளிரும் இனையம்
DREAM SOLUTIONS PVT LTD
The Solutions People
The King Of Multimedia

சுயகற்றலுக்கான தமிழில்
பல்லூடக குறுவட்டுக்கள்

Ms-Word-xp, Ms-Excel-xp, PowerPoint-xp, Ms-Access-xp, Ms-FrontPage-xp, Ms-Visual Basic
Pagemaker, PhotoShop, CorelDraw, Macromedia Flash, Computer Hardware, 3D-Studio Max.
Java, TCP/IP, SQL, Thirukkural, Thamizha
இன்னும் பல...

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 தை – 11 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 13 (24.01.2005) திங்கட்கிழமை இதழ்: 116

# 26 ஆம் திகதியை துக்கதினமாக விடுதலைப் புலிகள் பிரகடனம்!

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் தமிழர் தாயகத்திலும் ஏனைய தெற்காசிய நாடுகளிலும் இறந்தவர்களை நினைவுகூரும் வகையில் எதிர்வரும் 26 ஆம் திகதியை தமிழீழ விடுதலைப் புலிகள் தேசிய துக்க தினமாகப் பிரகடனம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியற்துறை நடுவப்பணியகத்தில் இருந்து நேற்றிரவு வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற போரினால் மிகுந்த துன்பங்களையும் அழிவுகளையும் சொல்லொணா இடர்களையும் சந்தித்த எமது மக்கள் வாழ்க்கையில் அனுகூலங்கள் அனைத்தையும் இழந்தனர். தற்போது நிலவிவரும் போர் நிறுத்த காலத்தில் எமது மக்கள் கடற்கரையோரங்களில் குடியேறி தமது வாழ்வாதாரத்துக்கான கடற்தொழிலை மேற்கொண்டு வாழ்வியல் அனுகூலங்களை ஓரளவு உள்வாங்கத் தொடங்கினர்.

இந்த நிலையில் கடந்த 26.12.2004 அன்று சற்றும் எதிர்பாராத விதமாகப் பொங்கியெழுந்த நில அதிர்வுப் பேரலைகள் இலங்கைத் தீவு உட்பட தெற்காசிய பிராந்தியத்தின் கரையோரப் பகுதிகளைத் தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்தியது. இலங்கைத் தீவில் எமது தாயகப் பகுதிகளில் வாழும் மக்கள் அதிகமான அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்கு கப்பல்களை வாங்குவதற்கு

# வெளிநாட்டு நிதியின் ஒரு பகுதியை ஒதுக்குமாறு கோருகிறார் சந்தகிரி!

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் கடலில் மூழ்கிப்போன கடற்படைக் கப்பல்களுக்குப் பதிலாக புதிய கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவியின் ஒரு பகுதியை ஒதுக்கித் தருமாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சுனாமி அனர்த்தத்தால் இலங்கைக் கடற்படைக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டன. இவற்றுள் காலி கடற்படைத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த பராக்கிரமபாகு மற்றும் தரையிறங்கு கலம் என்பனவும் மூழ்கியமை குறிப்பிடத்தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



முல்லைத்தீவில் சுனாமி கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் நேரில் பார்வையிட்டு பொதுமக்களுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# சுனாமி நிவாரண நிதியிலிருந்து ஆயுதங்கள் வாங்கவில்லையாம்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கப்பட்ட நிதியுதவிகளைப் பயன்படுத்தி ஆயுதக்கொள்வனவில் ஈடுபட்டுவருவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளதாவது -

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஆயுதக் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்படுகின்றதென்பதனை நாம் முற்றாக மறுக்கின்றோம். ஈரானில் ஆயுதங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக நாம் அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தையை நடத்தி வருகின்றோம். ஆனாலும், இதற்கான இறுதி வடிவம் இன்னமும் நிறைவுசெய்யப்படவில்லை.

அத்துடன் ஈரானிலிருந்து எவ்வகையான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படுமென்பதையும் நான் தெரிவிக்கமாட்டேன்.

நாம் ஒரு நிரந்தரப் படையமைப்பை வைத்துள்ளோம். எனவே, நாம் நாட்டுக்குத் தேவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமி நிவாரணப்பணிகள் குறித்து றெஜியுடன் நோர்வே குழு ஆராய்வு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஜான் பீற்றர்சன் தலைமையிலான நோர்வே உயர்மட்டக் குழுவினர் -தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜியுடன் சுனாமி அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடனான சந்திப்புக்காக நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், நோர்வே அபிவிருத்தி அமைச்சர் ஹில்ட் எப்.ஜோன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி சந்திப்பு குறித்து கதிர்காமருக்கு விளக்கம்!

(கொழும்பு)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடனான சந்திப்புத் தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருக்கு தனித்தனியாக விளக்கிக்கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியுடன் பேசுவதில்லை; ஜே.வி.பி. அரசியல்குழு முடிவு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட கூட்டணி உடன்பாட்டுக்கு முரணான வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் திருத்திக்கொள்ளும்வரை அந்தக் கட்சியுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையையும் மேற்கொள்ளப் போவதில்லை என ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கு அதிரடிப்படையினர் தடைவிதிப்பு!

(கொழும்பு)

அம்பாறை விநாயகபுரம் பாடசாலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி சுனாமி பேரனர்த்தத்தால் உயிரிழந்த பொதுமக்களை நினைவு கூர்ந்து, அப்பகுதி மக்களால் நடத்த ஒழுங்கு செய்யப்பட்ட ஆத்மசாந்திப் பிரார்த்தனையை அம்பாறை மாவட்ட விசேட அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்தியுள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# 2005 வரவு – செலவுத் திட்டத்தின் அதிகரித்த ஓய்வூதியப் பட்டியல்

2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி அரசாங்க ஊழியர் சம்பள மாற்றத்துக்கமைய ஓய்வூதியக் கணிப்பீடு தொடர்பாக ஓய்வூதியத் திணைக்கள சுற்றறிக்கை பின் வருமாறு அமைகிறது:-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 9/2004 இற்கு இணங்க அரச ஊழியர்களின் சம்பளங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் 01.12.2004 இன் பின்னர் ஓய்வு பெறுபவர்களின் ஓய்வூதியம் கணிப்பிடப்பட்டுள்ளது.

01.12.2004 அரச சேவையில் இருந்து அதன் பின் ஓய்வு பெறும் போது பொதுநிர்வாக சுற்றறிக்கை 9/2004 இற்கு இணங்க அதிகரிக்கப்பட்ட சம்பளம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் அத்துடன்,

ஓய்வூதிய வீதங்களைக் கணக்கிடும் போது இணைப்பு கீழ்க் கண்டவாறு வீதங்களில் கணிப்பீடுகள் செய்யப்பட வேண்டும் என்பதுடன் 01.12.2004 இன் பின் ஓய்வு பெறும் அரச ஊழியர்களின் ஓய்வூதியம் தொடர்பில், மேற்படி சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படும் அதேவேளை ஓய்வூதியத் திணைக்கள 30.06.2004 ஆம் திகதியில் 9/2004 சுற்றறிக்கையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| சேவைக் காலம் | 25 வருடம் | | 25 வருடம் 6 மாதம் | | 26 வருடம் | | 26 வருடம் 6 மாதம் | | 27 வருடம் | | 27 வருடம் 6 மாதம் | | 28 வருடம் | | 28 வருடம் 6 மாதம் | | 29 வருடம் | | 29 வருடம் 6 மாதம் | | 29 வருடம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடாந்த சம்பளம் | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ | மா.ப. கொ. | மா.ஓ |
| ரூபா 105841 ற்கு உட்பட்ட | % 85 | % 75 | % 86 | % 76 | % 87 | % 77 | % 88 | % 78 | % 89 | % 79 | % 90 | % 80 | % 90 | % 81 | % 90 | % 82 | % 90 | % 83 | % 90 | % 84 | % 90 | % 85 |
| ரூபா 105841-107100 | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% | 88% | 78% | 89% | 79% | 90% | 80% | 90% | 81% | 90% | 82% | 90% | 83% | 90% | 84% |
| ரூபா 107101-111120 | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% | 88% | 78% | 89% | 79% | 90% | 80% | 90% | 81% | 90% | 82% | 90% | 83% |
| ரூபா 111121-113760 | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% | 88% | 78% | 89% | 79% | 90% | 80% | 90% | 81% | 90% | 82% |
| ரூபா 113761-117720 | 81% | 71% | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% | 88% | 78% | 89% | 79% | 90% | 80% | 90% | 81% |
| ரூபா 117721-134400 | 80% | 70% | 81% | 71% | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% | 88% | 78% | 89% | 79% | 90% | 80% |
| ரூபா 134401-178500 | 79% | 69% | 80% | 70% | 81% | 71% | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% | 88% | 78% | 89% | 79% |
| ரூபா 178501-195300 | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 81% | 71% | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% | 88% | 78% |
| ரூபா 195301-210420 | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 81% | 71% | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% | 87% | 77% |
| ரூபா 210421-289140 | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 81% | 71% | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% | 86% | 76% |
| ரூபா 289140 இற்கு மேல் | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 81% | 71% | 82% | 72% | 83% | 73% | 84% | 74% | 85% | 75% |

★ மா.ப.கொ - மாற்றியமைக்கப்பட்ட பணிக் கொடை ★ மா.ஓ - மாற்றியமைக்கப்பட்ட ஓய்வூதியம்

## வாசகர் கடிதம்

### சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் அவலநிலை!

சுனாமி கடல் அனர்த்தத்தினால வடமராட்சி பிரதேசத்தின் கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள பெருமளவிலான பயிர் நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளது. இங்குள்ள கிணறுகளின் நீர் உவர்நீராகியுள்ளது.

இதனால் வடமராட்சி கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

சுனாமி கடல் அலை புகுந்த பின்னர் இந்த நிலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளின் பயிர்கள் வளர்ச்சியின்றி கருகிச் செல்கின்றன. தோட்டக் கிணறுகள் பலமுறை இறைத்தும் நீரின் உவர்த்தன்மை மாறவில்லை.

கரையோரப் பகுதிகளில்.அமைநதுள்ள விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கையையே நம்பி வாழ்ந்த மக்கள், நிர்க்கதி நிலையில நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சுனாமி அனர்த்தத்தின்போது இடம்பெயராது, பெருளவில் பாதிப்பை ஏற்படுத்தாத போதிலும் விவசாயத்தை நம்பி வாழ்ந்தவர்களுக்கு அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதற்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

காலங்காலமாக வெள்ள அனர்தம், இடப்பெயர்வுகள் என்பவற்றால பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படாதது போலல்லாது, தற்போதாவது நிவாரணம் பெற்றுத்தர உரியவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா?

இந்தப் பகுதி விவசாயிகள் தமது விவசாய நிலங்களை பயிர்ச செய்கை நிலங்களாக மாற்றுவதற்கும், பயிர்ச்செய்கைக்குரிய நிலங்களாகத் தயார்ப்படுத்துவதற்கும் இலங்கை வங்கியில் கடனைப் பெற்றனர். பயிர்ச்செய்கை பாதிப்படைந்த நிலையில் இந்தக் கடனை மீளச்செலுத்துவதற்கு என்ன செய்வதென்று தெரியாது ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது பயிர்ச்செய்கையில் முதலீடுகளை இழந்து, நிவாரண உதவிகளின்றி இருக்கும் விவசாயிகள் இலங்கை வங்கிக் கடனை மீளச்செலுத்துவதற்கான கால எல்லை நீடிக்கப்படுமா? அல்லது அந்தக் கடனை சுனாமியால் பாதிக கப்பட்ட மக்களுக்கு வழங்கும் சலுகைகளைப் போன்று சம்பந்தப்பட்டவர்கள் வங்கிக்கடனை ரத்துச் செய்வார்களா?

சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களோ, விவசாய திணைக்களங்களோ விவசாய சம்மேளனங்களோ, அரசோ எந்த உதவிகளும் வழங்க முன்வரவில்லை. உதவிகளின்றி நிர்க்கதி நிலையில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளோ, மனிதநேய அமைப்புக்களோ உதவுவதற்கு முன்வருவார்களா?

பாதிக்கப்பட்ட
புலோலி வடமேற்கு
விவசாயிகள்

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 11 மணிக்கு நல்லூர் - நாவலர் வீதி கைலாசப் பிள்ளையார் கோவிலடியில் இடம் பெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையை இலங்கைத் தமிழா ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் நிகழ்த்துவார். கருத்துரைகளை ஊவா மாகாணசபை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம், யாழ்.மாவட்டச் செயலகத் திட்டப் பணிப்பாளர் இ.கேதீஸ்வரன், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், இலங்கை ஆடைத் தொழிறசாலை இணைப்பாளர் என்.புஸ்பராணி, சர்வதேச தகவல் பரிமாற்று நிறுவனத்தின் இணைப்பாளர் வற்றீசியா லோட் இறைன் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

### கருத்தரங்கு

யாழ். சர்வதேச மாக்சிச குழு நடத்தும் 'சுனாமி மானிட அழிவுகள் முதல் அரசியல் நகர்வுவரை' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று மாலை 4 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வலிகாமம் மேற்கில் முழுநிலா நிகழ்வு

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் மாதாந்த முழுநிலா நிகழ்வு இன்று பற்பகல் 2 மணிமுதல் 5 மணிவரை சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், 'சீரிய கலாசாரத்திற்கு கல்வியின் பங்கு' என்னும் தலைப்பில் தெல்லிப்பளைக் கல்விக் கோட்ட உதவிப்பணிப்பாளர் ச.கைலாசநாதனும், 'கலையும் வாழ்வும்' என்னும் விடயம் பற்றி கலாசாரப் பேரவையின் உபதலைவரும், முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளருமான சு.கணபதிப்பிள்ளையும் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

மற்றும் பிரதேச செயலகம் நடாத்திவரும் வாத்திய இசைப் பயிற்சி மாணவர்களின் ஓகன் வாத்திய இசை நிகழ்சியும் இடம் பெறவுள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (48)

## கலாசாரம் பேணுவோரால் கசிப்பு அருந்தியவர் எச்சரிக்கை

சட்டவிரோத மதுபான கசிப்பு அருந்திக் கொண்டிருந்த குடும்பஸ்தர் கலாசாரம் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டார்.

சக்கோட்டையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கசிப்பு அருந்திவிட்டு வீதிகளில் பயணம் செய்வோரை தகாத வார்த்தைகளால் பேசி பயணிகளுக்கு இடையூறு விளைவித்து வருவதாக அந்தப் பிரதேச கலாசாரம் பேணும் குழுவினரிடம் அந்தப் பகுதி மக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் பிரஸ்தாப நபர் கசிப்பு அருந்திக் கொண்டிருந்த வேளை, வீட்டுக்குச் சென்ற கலாசாரம் பேணும் குழுவினர் நபரை அழைத்துச் சென்று எச்சரிக்கை செய்தபின்னர் விடுவித்தனர். (12)


## கண்ணீர் அஞ்சலி



22-01-2005 இல் காலமான சாவகச்சேரி திருக்கணித பதிப்பக நடத்துநர் திரு.சிவஞானசுந்தரத்தின் – தந்தையாரான கந்தர் காசிநாதர் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த் திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

டச்சு வீதி
சாவகச்சேரி

திருக்கணித பதிப்பக
உரிமையாளரும்,
பணியாளர்களும்.

# வடக்கு -கிழக்கில் ஏற்பட்ட அழிவுகளுக்கேற்ப உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

**எமது மக்கள் எந்த நிலையில் இருந்திருக்க வேண்டுமோ அந்த நிலைக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**


**சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மக்களுக்கு எவ்வாறு புனர்வாழ்வு அளிப்பது என்பது சம்பந்தமாக ஆராயும் ஆலோசனைக் கூட்டம் ஒன்று உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.**

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம், விடுதலைப் புலிகளின் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சே, திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோருடன் புத்திஜீவிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்த கொண்டனர். திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அங்கு உரையாற்றுகையில் -

சுனாமியின் தாக்கத்தால் வடக்கு - கிழக்குப் பொருளாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான சொத்துக்கள் இழக்கப்பட்டுள்ளன. கரையோர மக்களுடன் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயம் செய்ய முடியாத நிலைமை தோன்றியுள்ளது. நிலங்கள் உவராக மாறியுள்ளது. உடனடியாகத் தொழிலை ஆரம்பிக்க முடியாத நிலையில் மக்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு உதவப் பல வெளிநாட்டு நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. பாதிக்கபட்டவர்களுக்கான உதவிகள் வழங்கப் படவேண்டும். இவை முறையாக வழங்கப்படுவதோடு, பாதிப்புக்களுக்கு ஏற்ற விதத்தில் வழங்கப்பட வேண்டும். இது வேறு முறைகளில் வழங்கப்படுவதை எந்த விதத்திலும் அனுமதிக்கமுடியாது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அழிவின் அடிப்படையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும். உதவிகள் கிடைப்பதை உறுதிசெய்து கொள்ளவேண்டும். எமது மக்களை இருந்த நிலைக்குக் கொண்டு வருவது எமது நோக்கம் அல்ல. அவர்கள் எந்த நிலையில் இருந்திருக்க வேண்டுமோ அந்த நிலைக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம்.

வெளிநாடுகள், சர்வதேச தொண்டர் நிறுவனங்களிடம் பணத்தைக் கொடுத்து, அதனூடாக வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். இதைக் கையாள ஒரு அமைப்பு உருவாக்கப்படவேண்டும். எல்லா நாடுகளும் பாரிய அளவில் உதவி செய்யத் தயாராக இருக்கின்றன. இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்களால் அனுப்பப்படும் பணம் இங்கு முழுமையாக பயன்படத்தப்படுகின்றது என்ற விடத்தில் அவர்கள் திருப்தி அடைந்து கொள்ள வேண்டும். அவர்கள் திருப்தி அடையா விட்டால் நாம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கமாட்டாது. அவர்களுக்கு



நம்பிக்கை ஏற்படுத்துவது எமது கடமை.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் வடக்கு - கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்ட பிரதேசமாகவே இருந்திருக்கின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் வெளியில் இருந்து வந்து குடியேறியவர்களே சுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு - கிழக்கு மீனவர்கள் தமது தொழிலை சுதந்திரமாக செய்யமுடியாத நிலையில் இருக்கின்றார்கள். இவர்கள் தொழிலைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வெளிநாடுகள் 1500 சக்தி மிக்க பாரிய கடல்கலங்களை வழங்கவுள்ளது. இதில் அரைப்பங்கு வடக்கு - கிழக்குக்கு வழங்கப்பட வேண்டும்.

வெளிநாட்டு நிதிகளைக் கொண்டு அரசாங்கம் தென்மாகாணத்தில் பாதிக்கப்பட்ட வீதிகளைத் திருத்தியதோடு, பல வீதிகளைப் புதிதாக அமைத்தும் வருகின்றது.

எந்தவித பாரபட்சமுமின்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெறத்தக்கதாக இருக்க வேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்வர்கள் நிவாரணம் பெறுவதற்கு அடிப்படைத் தேவை அவர்கள் இங்கு நிரந்தரமாக வசித்திருக்க வேண்டும்.

தன்னாட்சி ஏற்பட, நிரந்தர சமாதானம் ஏற்பட இதனை வாய்ப்பாக நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதனையே வெளிநாட்டு நிதி நிறுவனங்களும் எதிர்பார்க்கின்றன எனத் தெரிவித்தார். (04)

## 10 ஆயிரம் கூடாரங்கள் உடனடியாகத் தேவை

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு உடனடியாக 10 ஆயிரம் கூடாரங்கள் தேவை என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

தற்போது பாடசாலை, நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்கள் பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டுள்ள நிலையில் வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் தங்குவதற்கு தற்காலிக கூடாரங்கள் தேவைப்படுவதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கு பல்வேறு நிறுவனங்கள் 29 ஆயிரம் கூடாரங்களை வழங்க உறுதியளித்துள்ளன. இவற்றில் எத்தனை கூடாரங்கள் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு வழங்கப்படும் என்பது குறித்து உறுதியாக கூறமுடியாது என்றும் புனர்வாழ்வு கழகம் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, முதலாம் தவணைக்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதனால் பிள்ளைகளின் கற்பித்தல் செயற்பாடு கருதி, அந்தப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்காக சிரமதானம் மற்றும் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (01)

## 5 ஆயிரம் மெற்றிக்தொன் கோதுமை மா விரைவில் இறக்குமதி

நாட்டில் ஏற்பட்டுள்ள கோதுமை மாவுக்கான தட்டுப்பாட்டினை நீக்குவதற்காக பெருமளவான கோதுமை மாவை இறக்குமதி செய்யவுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே தெரிவித்தார்.

அடுத்த வாரம் 5ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ மா 24 ருபாவிற்கு விற் பனை செய்யமுடியும் என்றும் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே தெரி வித்தார்.

## புலிகளின் பிரதேசத்துக்கும் உதவிகள் பகிரப்படுகிறதாம்!

### நிதியமைச்சர் கூறுகிறார்

வடக்கு, கிழக்கு மகாணத்தில் பெரும்பகுதி அரசாங்க கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இந்தப் பகுதிகளுக்கான உதவிகளை மேற்கொள்ளும் அரசாங்கம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கும் உதவிகளை வழங்கி வருவதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதர் ஹெல்கிசன், நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்ட். எப்.ஜோன்ஸன், மற்றும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருடனான சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தத்துக்கான மீள் கட்டுமானம் மற்றும் நிவாரண உதவிப் பொருட்கள் போதுமானதாக இல்லையென குற்றம்சாட்டுவதை நோர்வேக் குழுவினர் அந்தப்பகுதிக்கு சென்று உண்மையைக் கண்டறிவர்.

அத்துடன் விடுதலைப்புலிகள் எந்தவொரு வெளிநாட்டு உதவிகளையும் கோரவில்லை. மாறாக அவர்களது அரசுசாரா அமைப்பான புனர்வாழ்வுக் கழகமே இந்தக் கோரிக்கையை விடுத்தது எனவும் அவர் தெரிவித்தார்.

### அடுத்த 5 வருடங்களுக்கு

## தேர்தலை நடத்தாமல் விடும் சட்டவரைபை தயாரிக்க திட்டம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தை காரணமாக வைத்து நடைபெறவிருக்கும் அனைத்து தேர்தல்களையும் ஒத்திவைத்து - ஜனாதிபதி மேலும் 5 வருடங்கள் அதிகாரத்தில் இருக்கக்கூடிய வகையில் சட்டவரைபைத் தயாரிப்பதற்கு அரசு தயாராவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் இது குறித்து கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

ஐந்து வருடங்களுக்கு தேர்தல் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. இதன் மூலம் தேர்தல் வாக்குச் சீட்டில் எத்தனை வாக்குகள் போடுவது என்பதை மறப்போம் எனவும் தெரிவித்த கருத்து நாட்டின் அரசியலிலும், சாதாரண மக்களிடையேயும் முக்கியமாக பேசப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி இவ்வாறு கூறினாலும் அரசியல் அமைப்பின் படி இந்தவருடம் டிசெம்பருக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் 2006ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி தேர்தல் நடைபெறாதென ஜக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் உயர் மட்டப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.


இந்த நிலையில் ஜனாதிபதி தோதலை வருடக் கணக்கில் ஒத்திப் போடும் வகையில் அரசாங்கமோ, ஜனாதிபதியோ செயற்படுவார்களேயானால் நாட்டில் ஜனநாயகம் இல்லை என்பது புலப்படும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எப்படியாயினும் பலவித உபாயங்களைக் கையாண்டாவது தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும் அரசாங்கம் சுனாமி அனர்த்தத்துக்காக கிடைக்கும் உதவிகளைச் செலவு செய்தாவது, எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு எண்ணியிருப்பதாகவும் அறிக்கைகள் தெரிவித்திருப்பதாக இருதின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(தே)

## இலங்கையின் தேசிய முன்னேற்றத்துக்கு மாறாத தேசியக் கொள்கை அவசியம்!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



இலங்கையில் ஆட்சியிலுள்ள அரசியல் கட்சிகள் மாறினாலும் பிரதான விடயங்களின் கொள்கை மாற்றம் ஏற்படாதவகையில் பொதுவாக தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாவனல்லையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது -

இலங்கையில் கட்சி அரசியலுக்கு அப்பால் தேசிய கொள்கையின் அடிப்படையில் அரசாங்கம் ஒன்று இயங்குமாயின், அது நாட்டுக்கு நீண்டகால நன்மையைக் கொண்டுவரும்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுடன் இரண்டு முறை இலங்கை இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக பேச்சு நடத்திய போது, அடுத்து ஆட்சிக்கு வந்துள்ள காங்கிரஸ் கட்சியும் அதே கொள்கையைக் கடைப்பிடிப்பதாகத் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கொள்கையை கொண்டுள்ள ஹங்கேரி, போலந்து நாடுகளும் - அதே போன்று இராணுவ ஆட்சியின் கீழ் இருந்த தென் கொரியாவும் தேசிய கொள்கை காரணமாக அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முன்னேறியுள்ளன.

1956 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்தது.

இதனையடுத்து 1976 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான அரசாங்கம், மேற்கொண்ட தமிழர்களின் உரிமைகளை பறித்த செயற்பாடானது, இலங்கையில் இனப்பிரச்சினையின் தீவிரத்தை மேலும் அதிகரிக்கச்செய்தது.

இதற்குமுன்னர் 1948 ஆம் ஆண்டுக்குப் பின் வந்த காலப் பகுதியில் ஆட்சிபுரிந்த டி.எஸ் சேனநாயக்க - இலங்கையை ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த படியாக வளர்ச்சியடைந்த நாடாக மேம்படுத்தியிருந்தார். எனினும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியைத் தோற்கடிக்கவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசாங்கம் பொருளாதாரத்தைச் சீரழியச்செய்தது.

அதேபோலவே ஏனைய வருடங்களிலும் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை தோற்கடிக்க வந்த ஸ்ரீலாங்கா சுதந்திரக் கட்சி, பொருளாதார சீரழிவுக்கு நாட்டை இட்டுச் சென்றது. இலங்கையில் அரசியல் கட்சிகள் மாறினாலும் மாறாத தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்படுமானால், அது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (01)

## முல்லைத்தீவிலுள்ள ஓடுபாதையில் இரு விமானங்கள் தரையிறங்கியதாம்!

### இணையத்தளம் தகவல்

முல்லைத்தீவில் புலிகளால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஓடுபாதையில் இரண்டு இலகுரக விமானங்கள் தரையிறங்கியது பற்றிய தகவல்கள் படையினருக்குக் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

செஞ்சிலுவை இலச்சினை பொறிக்கப்பட்ட இந்த விமானங்கள் எங்கிருந்து வந்தன என்பது பற்றிய தகவல் ஏதுவும் கிடைக்கவில்லை. இந்த விமானங்கள் எவ்வாறு இலங்கை வான் பரப்புக்குள் பிரவேசித்தது என்பது குறித்த விசாரணைகள் இடம் பெற்றுவருகின்றன.

இந்த விமானங்கள் ஒவ்வொன்றும் சுமார் 20-30 தொன் எடையுடைய பொருட்களை எடுத்து வரக்கூடிய வசதி கொண்டவை என்றும் அந்தச் செய்தியில மேலு் தெரிவிக்கப்பட்டுளளது.

## இங்கிலாந்து அணிக்கு எதிராக

# தென்னாபிரிக்க அணி 247 ஓட்டங்கள் குவிப்பு!




(செஞ்சூரியன்)

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 247 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்தது.


செஞ்சூரியனில் கடந்த வெள்ளியன்று இந்தப்போட்டி ஆரம்பமாக விருந்தபோதும், மழை காரணமாக முதல்நாள் ஆட்டம் நடைபெறவில்லை. இரண்டாம் நாளான நேற்று முன்தினம் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தென்னாபிரிக்க அணியை அழைத்தது.

கப்டன் ஸ்மித்துக்குப் பதிலாக டி-வில்லியர்ஸ், கிப்ஸுடன் இணைந்து ஆட்டத்தைத் தொடங்கினார். நிதானமாக ஆடிய இந்த ஜோடியைப் பிரித்தார் பிளின்ரொப். இவரது பந்தில் கிப்ஸ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த றூடோல்ப் நல்ல ஒத்துழைப்பு அளிக்க டி-வில்லியர்ஸ் விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தார். இந்தஜோடி இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சை எளிதில் சமாளித்தது.

சிறப்பாக ஆடிய டி-வில்லியர்ஸ் அரைச்சதம் அடித்தார். கடந்த போட்டியில் 12 விக்கெட் வீழ்த்திய ஹொகாட் கூட இந்த ஜோடியைப் பிரிக்கச் சிரமப்பட்டார். இறுதியில் இவரது முயற்சிக்குப் பலன் கிடைத்தது.

ஹொகாட் வீசிய பந்தை பவுண்டரிக்கு அடிக்கமுயன்ற றூடோல்ப் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.




அடுத்துவந்த கலிஸ் 8 ஓட்டங்களுடனும் பிளின்ரொப் வீசிய 'யோக்கர்' பந்தில் போல்டானார். பின்னர் ஸ்மித், டி-வில்லியர்ஸ் இணைந்து விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தனர்.

அணியின் ஸ்கோர் 187 ஐத்தொட்ட போது - அபாரமாக ஆடிக்கொண்டிருந்த டி-வில்லியர்ஸ் ஆட்டமிழந்தார். 165 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 92 ஓட்டங்களைப் பெற்றிருந்த இவர் கைல்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க நேரிட்டது.

அடுத்து சிமித்துடன் பௌச்சர் இணைந்து ஆடினார். ஆனால் ஸ்கோர் 200ஐத் தொட்டபோது சிமித்




25 ஓட்டங்களுடன் பிளின்ரொப்பின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதே வேளை அடுத்துவந்த பொலக்கும் 2 பந்துகளை மட்டும் எதிர்கொண்டு டக் அவுட்டாகி வெளியேறினார்.

பௌச்சர் - போயே ஜோடி சற்று நேரம் நின்று பிடித்து ஸ்கோரை 222 இற்கு உயர்த்தியது. அந்தவேளையில்தான் பௌச்சர், ஜோன்சின் பந்துவீச்சில் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல நேரிட்டது.

பின்னர் போயே 9 ஓட்டங்களுடனும் என்ரினி 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.


இரண்டாம்நாள் ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்துவீச்சில் பிளின்ரொப் 4 விக்கெட்டுக்களையும், ஜோன்ஸ் 3 விக்கெட்டுக்களையும், கைல்ஸ், ஹொகாட் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

விளையாட்டு

## அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ்

# றொடிக் - டெவன் போட் 4ஆம் சுற்றுக்குத் தெரிவு



அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் தொடரில் அன்டி றொடிக், டேவன் போர்ட் போன்ற முன்னணி வீர, வீராங்கனைகள் நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர். பிரிட்டனின் நட்சத்திர வீரரான டிம் ஹென்மேன் தோல்வி அடைந்தார்.

நேற்றுமுன்தினம் மூன்றாம் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. உலகின் இரண்டாம்நிலை வீரரான அமெரிக்காவின் அன்டி றொடிக் ஆஸ்திரியாவின் ஜர்கன் மெல்ஸரை எதிர்த்து விளையாடினார்.

இதில் றொடிக் 6-2, 6-2, 7-5 என்ற நேர் செட்களில் மெல்ஸரை வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். அவுஸ்ரேலிய வீரர் லெய்டன் ஹெவிட் 6-2, 4-6, 6-1, 6-4 என்ற செட்களில் ஆஜென்ரீனாவின் இக்னசியோ சேலாவை வீழ்த்தினார்.

ஆஜென்ரீனாவின் முன்னணி வீரர்களான கில்லர்மோ கோரியா, டேவிட் நள்பாந்தியன், கில்லர்மோ கேனஸ் ஆகியோர் மூன்றாவது சுற்றில் வெற்றிபெற்றனர். கில்லர்மோ கோரியா 6-3, 6-2, 6-3 என்ற செட்களில் சிலியின் பெர்னாண்டோ கான்செலசையும், கில்லர்மோ கேனஸ் 6-1, 6-2, 6-2 என்ற செட்களில் செக் குடியரசின் றொடிக் ஸ்ரீபனக்கையும் வீழ்த்தி, நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

ஏழாம் நிலை வீரரான பிரிட்டனின் டிம் ஹென்மேன் 4-6, 2-6, 2-6 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் நிகோலே டேவிடென்கோவிடம் தோல்வியடைந்தார். பிரிட்டனின் முதல்



நிலை வீரரான இவர் கடந்த ஆண்டு பிரெஞ் ஓபன், யு. எஸ். ஓபன் தொடரில் அரையிறுதிவரை முன்னேறியவர். ஆனால் இந்தமுறை மூன்றாவது சுற்றிலே வெளியேறி ஏமாற்றமளித்தார்.

பெண்கள் பிரிவில் முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன் போர்ட் 6-2, 6-4 என்ற நேர் செட்களில் செக் குடியரசின் நிக்கோல் வைடிசோவை வென்றார். நான்காவது சுற்றில் இவர் குரோஷியாவின் கரோலினா ஸ்பிரமைச் சந்திப்பார்.

கரோலினா மூன்றாவது சுற்றில் 6-4, 6-3 என்ற செட்களில் ரஷ்யாவின் எலினா லிகோவட்செவாவை வீழ்த்தினார். எட்டாம்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 6-3, 6-0 என்ற செட்களில் இஸ்ரேலின் அன்னஸ்மாஷ்னோவாவையும் ரஷ்யாவின் ஸ்வெட்லானா குஸ்நட்சோவா 6-3, 7-6 என்ற செட்களில். ஆஜென்ரீனாவின் மரியானா டியாஸ் ஒலிவாவையும் வென்றனர்.

மற்றொரு ரஷ்ய வீராங்கனையான எலீனா டெமன்ரீவா 7-5, 5-7, 6-4 என்ற செட்களில் சுலோவாகியாவின் டேனிலா ஹன்டுசோவாவை வெளியேற்றினார். தசைப்பிடிப்பு காரணமாக அமெரிக்காவின் லிசா ரேமண்ட் போட்டிக்கு முன்னதாக விலகிக்கொண்டார். இதனால் இவரை எதிர்த்து ஆடவிருந்த ரஷ்யாவின் அனஸ்டாசியா மிஸ்கீனா நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

# அவுஸ்ரேலிய இளம் பெண்ணை அக்தர் வல்லுறவுக்குட்படுத்தினாரா?

## சந்தேகம் கிளப்புகின்றது பத்திரிகை



அவுஸ்ரேலியப் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய விவகாரத்தில் பாகிஸ்தான் வீரர் சொகைப் அக்தர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

மெல்பேர்னில் கடந்த 20ஆம் திகதி 2ஆவது டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன்பு பாகிஸ்தான் வீரர் ஒருவர் அவுஸ்ரேலியப் பெண்ணைக் ஹோட்டல் அறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அவுஸ்ரேலியப் பத்திரிகை ஒன்று அந்தப்பெண், இந்தப் பாலியல் வல்லுறவுப் புகாரைக் கூறியிருப்பதாகச் செய்தி வெளியிட்டது. அந்தப் பாகிஸ்தான் வீரர் யார் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இந்தநிலையில் அந்தப் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய விவகாரத்தில் சொகைப் அக்தருக்குத் தொடர்பு இருக்கலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான சொகைப் அக்தர் கடந்த சில தினங்களுக்கு முன்பு நாடு திரும்பினார். பாலியல் வல்லுறவுப் புகாரின் பேரில்தான் அவர் நாடு திரும்பியதாகக் கூறப்படுகிறது.

இதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மறுத்துள்ளது. இந்தியத் தொடருக்குத் தயாராக இருக்கும் வகையில் அவர் அழைக்கப்பட்டு இருப்பதாகக் கூறியுள்ளது.

அக்தர் இரவு நேரங்களில் சுற்றுவதுபோல் படங்களையும் அவுஸ்ரேலியப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதையும் பாகிஸ்தான் மறுத்துள்ளது. அவுஸ்ரேலிய பத்திரிகைமீது சட்டப்படியான நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆலோசிக்கப்படும் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியா கான் கூறியுள்ளார்.



சுனாமி நிவாரணத்துக்காக கங்கூலி தலைமையில் ஒரு அணியும், இந்தி நடிகர் மிதுன் சக்கரவர்த்தி தலைமையில் ஒரு அணியும் பங்குபற்றிய காட்சி உதைபந்தாட்டப் போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது. இதில் கங்கூலி விளையாடும் காட்சி இது. கங்கூலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டி மூலம் சுமார் 27 லட்சம் ரூபா திரட்டப்பட்டது.

VB SERIES AUSTRALIA, PAKISTAN, WEST INDIES

## வி.பி. முக்கோணத் தொடர்

# 9 விக்கெட்டுக்களால் பாகிஸ்தானை அவுஸ்ரேலிய அணி வீழ்த்தியது!



(சிட்னி)

வி.பி.முக்கோணத்தொடரில் பாகிஸ்தான் அணியை 163 ஓட்டங்களுக்குள் வீழ்த்திய அவுஸ்ரேலிய அணி, 37 ஆவது ஓவரிலேயே 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நேற்று இரவு-பகல் ஆட்டமாக நடை பெற்ற இந்தப் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பாகிஸ்தான் அணியை அழைத்தது.

ஆட்டத்தின் தொடக்கமே பாகிஸ்தான் அணியைக் கலக்கமடையச் செய்தது. ஸ்கோர் 2 ஆக இருந்தபோதே சல்மான் பட்டும், கம்ரன் அக்மலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

பட் 8 பந்துகளை எதிர்கொண்டு ஓட்டமெதையும் பெறாமலும், அக்மல் 7 பந்துகளில் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து சொகைப் மலிக் - இன்சமாமுடன் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் இணைந்து ஆடி ஸ்கோரை 38 ஆக உயர்த்தியபோது சொகைப் மலிக்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 29 பந்துகளில் 8 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.

அடுத்ததாக வந்த யூசுப் யுகானாவும் 4 ஓட்டங்களுடன் கஸ்பரோவிச்சின் பந்துவீச்சுக்குப் பலியாக நேரிட்டது. இதன்பின்னர் மொகமட் ஹபீஸ் களமிறங்கினார்.

ஸ்கோர் 68 ஆக உயர்ந்தபோது இவரும் 13 ஓட்டங்களுடன் வற்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க நேரிட்டது. இன்ஸமாம் நிலைத்து நின்று ஆடிக்கொண்டிருந்தபோது, அவருடன் இணைந்த அப்துல் ரசாக் 16 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

இதன்பின் அப்ரிடி களமிறங்கி அதிரடி ஆட்டம் ஆட முற்பட்டபோது இன்ஸமாம் ஆட்டமிழந்தார். லீமனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்த இவர் 61 பந்துகளை எதிர்கொண்டு 4 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

இதையடுத்து அப்ரிடியுடன் ஜோடி



சேர்ந்த அசார் மஃமூட் ஒரு ஓட்டத்துடனும், நவீட் உல் ஹசன் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இதேவேளை அப்ரிடி அடித்து ஆடி ஓட்டங்களைக் குவித்தார். ஆனால் இவரும் ஸ்கோர் 163 ஆக இருந்தபோது லீமனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இவர் 37 பந்துகளில் 3 சிக்ஸர் 3




பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் லீமன் 3, லீ 2 மக்ரா 2, கஸ்பரோவிச் 1, வற்சன் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

163ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததையடுத்து இலகுவான இலக்குடன் அவுஸ்ரேலியா களமிறங்கியது.

கிளார்க் - ஹைடன் ஜோடி அபாரமாக ஆடிக்கொண்டிருந்தபோது ஸ்கோர் 79 ஆக இருந்தபோது ஹைடன் ஆட்டமிழந்தார். இவர் 65 பந்துகளில் 27 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து கிளார்க் - பொண்டிங் ஜோடி தொடர்ந்து ஆடி 36.2 ஓவர்களில் 167 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

கிளார்க் 107 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 103 ஓட்டங்களைப் பெற்றார். பொண்டிங் 51 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 17 ஓட்டங்களைப் பெற்றார். இவர்கள் இருவரும் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# சட்டத்தின் மூலம் ஒழுக்கத்தை ஏற்படுத்த முடியாது

# அதை பாடசாலை கற்பித்தலால் வளர்க்க வேண்டும்

## நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் சின்னாபின்னப்பட்டு, பொருளாதாரத்தில் பெரிதும் நலிவடைந்த ஜப்பான் அதன் விடாமுயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் தனித்து நின்று முன்னேறி, இன்று சுனாமியால் சிதைவடைந்த இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவிபுரிகிறது.

இதேபோன்ற தன்னம்பிக்கை மாணவர்கள் மத்தியில் இருந்தால் இன்று பரிசு பெறாத மாணவர்கள் கூட அடுத்த வருடத்தில் பரிசுகளை வெல்லலாம். தன்னம்பிக்கையுடன் சீரிய முறையில் கல்வி கற்றால் மாணவர்கள் எதையும் சாதிக்கலாம் என,

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 110 ஆவது வருட பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் - அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பாடசாலைகள் அறநெறி சார்ந்த பண்பாளர்களை உருவாக்கவேண்டும். மாறிவரும் சமுதாயத்தில் மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக வாழவேண்டும். அன்பு, பண்பு, நீதி, நியாயம், கீழ்ப்படிதல், புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனம் என்பன மாணவர்களிடத்தில் காணப்படவேண்டும். விளையாட்டுப் போட்டி நிகழ்வு ஒன்றில் வெற்றியைவிட எவ்வாறு பண்பாகப் புரிந்துணர்வுடன் விளையாடினார்கள் என்பதையே நோக்கப்படவேண்டும்.

ஒழுக்கம் என்பது சட்டங்களால் ஏற்படுத்தமுடியாது. பாடசாலைகள் மூலமே ஒழுக்கம் வளர்க்கப்படவேண்டும். 1960 களில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பெரிதும் போற்றப்பட்டார்கள். இதற்குப் பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்பும் கிடைத்தது. பின்னர் மனிதம் பெருகப் பெருக நாகரிகம் மாறிமாறி சமுதாயமும் மாறுபட்டுச் செல்கின்றது. மாணவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆனால் அந்த மகிழ்ச்சி மற்றவர்களை வேதனைப் படுத்துவதற்காக அமைந்துவிடக்கூடாது.

மற்றவர்களுக்கு நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாது விட்டாலும், தீமையாவது செய்யாது இரு என்னும் பகவத் கீதை கூறும் நல்ல கருத்துக்களை மாணவர்கள் பின்பற்றி நடந்தால், சிந்தனையும் செயற்பாடும் ஒன்றாக அமைந்து, சண்டை நீங்கி, சமாதானம் மலரும் என்றார்.

சட்டத்தரணி எம்.தியாகராஜா நிறுவுனர் நினைவுப் பேருரையாற்றுகையில் -

கந்தன் அருள்பெற்ற கந்தரோடையில் - ஸ்கந்தவரரோதயாக் கல்லூரி அமையப்பெற்றுள்ளது. இங்கு அடுத்தடுத்து முருகனின் நாமங்களையுடையோர் அதிபர்களாக, ஆசிரியர்களாகப் பணியாற்றக் கிடைத்தது கந்தன் அருளேயாகும்.

1894 ஆம் ஆண்டு முதல் தனது வாழ்நாளை கல்விக்கென அர்ப்பணித்தவர் கந்தையா அவர்களே. ஆறுமுகநாவலரின் வழியைப் பின்பற்றி பாடசாலையை வளர்ச்சியடைய செய்ததுடன், இலவசக் கல்வியை அன்று ஆரம்பித்தவரும் அவரே. அதன் பின்னர் வந்த ஒறேற்றர் சுப்பிரமணியம் ஏழைப் பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் கல்வி பயில அனுமதித்ததன் மூலம் சமுதாயத்தில் ஏற்படவிருந்த சமூகச்சீர்கேடுகளும் முற்றுப்புள்ளி வைததார் எனத் தெரிவித்தார்.(101)



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் நோயாளர்களுக்கு இரத்தம் போதாமையாகவுள்ள காரணத்தால் - யாழ். போதனாவைத்திசாலை இரத்த வங்கியினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் நேற்றுக்காலை இரத்த தானம் செய்தபோது எடுக்கப்பட்ட படம்.



வண்ணை வடமேற்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளி விளையாட்டு விழாவை முன்னாள் நாடாளுமன்ற உறப்பினர் விநாயகமூர்த்தி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி.ரட்ணராஜாசையும் படத்தில் காணலாம்.

## கீரிமலை மாரியம்மன் ஆலயத்துக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை

அண்மையில் இடம்பெற்ற சுனாமி அனர்தத்தின்போது, கீரிமலை கடற்கரை மாரியம்மன் ஆலயத்துக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார்.

படையினரின் அனுமதியுடன் ஆலயத்தைச் சென்று பார்வையிட்ட ஆலய தர்மகர்த்தா, ஆலயத்தின் ஓடுகள்கூட பாதிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த அன்று - கீரிமலைக்கு அந்தியேட்டிக்கு கிரியைக்காகச் சென்ற பலர் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்டனர்.

இது இவ்வாறிக்க, கடல் எல்லையிலிருந்து சுமார் 100 மீற்றருக்கும் குறைவான தூரத்தி லேயே இந்த ஆலயம் இருந்தும், எந்தவி சேதங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கோண்டாவில் ஞானவைரவர் ஆலயத்தில் சங்காபிஷேகம்

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு திருவருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் "மணவாளக்கோல நவவோத்ர சங்காபிஷேகம்" இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்னதாக காலை 7 மணிக்கு ஆரம்பக்கிரியைகள் நடைபெற்று 10 மணிக்கு வைரவர் சங்காபிஷேகமும், மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும், திருவூஞ்சல் பாடலும் காட்சியும் நடைபெறும்.(82)

## நுணாவில் கொல்லங்கிராய் வீதியூடாக

# அந்தப்பகுதி மக்கள் தவிர்ந்த ஏனையோர் செல்லத்தடை

(சாவகச்சேரி)

நுணாவில் கொல்லங்கிராய் வீதியூடாகத் தனங்கிளப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி ஆகிய இடங்களுக்கு அந்தப் பகுதி மக்கள் தவிர்ந்த ஏனைய பொது மக்கள் செல்வதற்கு படைத்தரப்பு அனுமதி மறுத்துள்ளது.

நெல் அறுவடைக்காலம் தொடங்கிய இந்த நேரத்தில் மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்ல படைத்தரப்பு அனுமதி மறுப்பதால் நெல் அறுவடைக்கு கூலியாட்களை வரவழைப்பதில் இடர்பாடுகள் தோன்றியுள்ளன.

தைப்பொங்கல் தினத்துக்குப் பின்பே இவ்வாறு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (29)

## இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

கட்டடப்பயிற்சி, மரவேலைப் பயிற்சி, வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் இணைப்பு ஆகிய தொழிற் பயிற்சிகளைப் பூர்த்தி செய்து வெளியேறி, வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளிடமிருந்து றீடோ நிறுவனத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சிகளில் அனுபவம் வாய்தவர்களுக்கும், தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து வெளியேறியவர்களுக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் - விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "மாவட்ட இணைப்பாளர், REERDO, குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அதிபருடன் மட்டும் இயங்கும் தவசிக்குளம் அரசினர் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் தவசிக்குளம் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கடந்த ஆறுமாதங்களாக அதிபர் ஒரு வருடன் மட்டுமே இயங்கிவருகிறது.

இந்தப் பாடசாலையில் தரம் 5 வரைதான் வகுப்புகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களின் கற்பித்தல் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாக மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

படை நடவடிக்கைகளில் இயங்காமலிருந்த இந்தப்பாடசாலை கடந்த ஆறுமாதங்களாக இங்கி வருகிறது. எனவே, மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கருத்திற்கொண்டு இந்தப் பாடசாலைக்கு மேலதிகமாக ஆசிரியர்களை நியமிக்குமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (17)

## வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தில் பயிற்சிகள் பெப்ரவரி 1ம் திகதி ஆரம்பம்

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தில் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த 7 மாதகால தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சிகள் - சுனாமி அனர்தத்தால் பிற்போடப்பட்டு, பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் அல்லது சனசமூக நிலையம், மாதர்சங்கம் போன்ற பொது நிறுவனங்களின் சிபார்சுடன் பயிற்சிபெற முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஆர்வமுடையோர் மேலதிக விபரங்களையும், விண்ணபப்படிவத்தையும் வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம், வதிரி, கரவெட்டி. எனும் முகவரியுடன் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் வார நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### விளையாட்டு மைதானம் சிரமதானம்

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் விளையாட்டு மைதானம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளது.

இக்கல்லூரியின் விளையாட்டு மைதானத்தைச் சூழ பற்றைகள் படர்ந்து மறைவிடமாக காணப்படுவதால் அந்தப்பகுதியை சிலர் அவ்விடத்தை கசிப்பு தயாரிப்பதற்கு சாதகமாகப் பயன்படுத்தி வருவதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து பொலிஸாரின் உதவியுடனேயே பாடசாலை சமூகத்தினரால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (82)

### உத்தியோகத்தர் ஓய்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ச.வீரசிங்கம் நாளை மறுதினத்துடன் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

மும்மொழி புலமையுடைய இவர் சமாதாண நீதிவானும். சத்தியப் பிரமான மொழிபெயர்ப்பாளருமாவார்.

இவரது இடத்துக்குப் புதிதாக நியமனமாகவுள்ளவர் பெயர் விபரம் இதுவரை வெளியிடப்படவில்லை. (24)

### மகா கும்பாபிஷேகம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு குமர கோட்டம் வீதி திருவருள்மிகு பழங்கிணற்றடி பாதாள வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 6.17 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பக்கிரியைகளும், 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் அடியவர்கள் எண்ணைக் காப்பிடுதலும், 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகமும், 31ஆம் திகதி திங்கள்கிழமை மண்டலாபிஷேகமும், மகேஸ்வர பூசையும் நடைபெற்று அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (82)

### மாணவர்களுக்கு யுனிசெப் உதவி

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்குக் கல்வி தொடர்பான உதவிகளை வழங்க யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

மாணவர்களுக்கான சீருடையுடன் தையல் கூலியையும் இந்த நிறுவனம் வழங்கவுள்ளது. (17)

### சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

சங்கானைப் பகுதியில் அண்மைக் காலமாக சைக்கிள் திருட்டுகள் அதிகரித்து வருகின்றன.

அண்மையில் சிகை அலங்கரிப்பு நிலையம், வீடியோப்பிரதி வாடகைக்கு விடப்படும் நிலையம் என்பவற்றுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்களை திருடர்கள் மிக சாமர்த்தியமாக திருடிச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அடுத்த சில தினங்களில் மதுபான நிலையம், சந்தை அண்டிய பகுதிகளிலும் சைக்கிள்கள் திருட்டுப்போயுள்ளன. இதுவரை 8 இற்கும் மேற்பட்ட சைக்கிள்கள் இவ்வாறு திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (47)

### கிறிஸ்தவ ஒன்றிப்பு வழிபாடு

கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் இறுதி நாள் ஒன்றிப்பு வழிபாடு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். புனித பேதுரு மெதடிஸ்த ஆலயத்தில் (யாழ். மத்திய கல்லூரி அருகில்) இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் சுனாமி இயற்கை அனர்த்தத்தின் 31 நாளாகும். எனவே அனைத்து திருச்சபைகளும் ஒன்றிணைந்து இவ்வழிபாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒன்றாக செபிக்க தயவு செய்து வருமாறு கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழு அமைப்பு விடுத்துள்ளது.




# உணர்வுகள் சாவதில்லை

நேற்று நடந்து முடிந்து போனது போல் எல்லாம் நடந்து முடிந்து போனது, எது நடக்கக் கூடாதோ அது நடந்தேறி விட்டது.

அக்கிரமங்களும், அநியாயங்களும் தலைதூக்கி நின்று ஆடும் இந்த மண்ணில் வாழ்வு என்பது அர்த்தமற்றதாகி விட்ட நிலை.

ஒவ்வொரு பொழுதுகளும் அவலமாய்க் கழிகின்றன.

எங்கோ ஒரு மூலையில் சாவொலி கேட்கத்தான் செய்கிறது.

நியாயம் எது என்று கேட்கமுடியாது மௌனத்துள் புதைந்துகொண்டு விம்மல் எடுக்கும் சமூகத்தில் ஒருத்தியாக, இன்னமும் வாழ்ந்துகொண்டு இருக்கிறாள் தங்கமுத்து ஆச்சி.

சாவைப் போர்த்தியபடி இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் வாழ்ப்போகிறாள். வாழ வேணும் என்ற ஆசை இத்துப் போச்சு.

வாழ்ந்து முடித்த கதை அவளது.

என்னதான் வாழ்ந்து முடித்தாள்? என்ற கேள்விக்குள் உழைப்பது, உண்பது, உறங்குவது என்ற விடை தொக்கிநின்றது.

பூ! வாழ்க்கை இவ்வளவுதானா?

பேர் சொல்ல ஒருபிள்ளை, ஊர் சொல்ல ஒருகுடில், கல்வி, பொருள் பண்டம் அப்படி எதுவும் இல்லை, உறுதி மட்டும் குலையாத நெஞ்சு.

ஊர் கூடி ஒப்பாரி வைத்து, உலை வைத்து, சபைகூடி எல்லாம் முடிந்து போன பின்னாலும் உணர்வுகளின் உராய்வுகளில் மனம் களைத்துப் போகும். அந்த நேரங்களில் எல்லாம் அந்தப் பிஞ்சுக் கரங்களின் வருடல்தான் ஆறுதல். அவன் செய்யும் குறும்புகள்தான் அவளின் மகிழ்ச்சி.

பேரன் முரளிக்காகவே அவள் மனம் ஏங்கியது, அவனது எதிர்காலம், வளர்ச்சி, வாழ்வு?

பாளம் பாளமாக மனம் வெடித்தும், அந்த வெடிப்புகளிலிருந்து அலைஅலையாகப் புறப்பட்ட எண்ணங்களில் இருந்து விடுபட அவளால் முடியவில்லை.

"இந்தப் பிஞ்சை அனாதையாக அலைய விடக்கூடாது, என்ரை கொட்டில உயிர் இருக்கிற வரைக்கும் உழைச்சுக் காப்பாத்துவன்"

அதின்ரை தாய் தகப்பன் இருந்தால்...!

தங்கமுத்து ஆச்சி புளியமர நிழலில் அமர்ந்துகொண்டாள். அவளுக்கு அந்த புளியமரமே போதிமரம். அந்த நிழல் அவளது கிலேசங்களைக் கிள்ளி எறிந்து விடும். அமைதியாக்கி விடும்.

இரண்டு தலைமுறையாக அந்தப் புளியமரம் அந்த இடத்தில் நிற்கிறது.

அதன் பயன் தங்கமுத்து ஆச்சிக்குக் கைகொடுப்பதுண்டு. சில நாட்களுக்கு முன்னால் இராணுவத் துப்பாக்கிக் குண்டுகள் அதன் உடலைச் சல்லடை போட்டும் அது தலைநிமிர்ந்து தான் நிற்கிறது.

நன்றிப் பெருக்குடன் தன்னை வளர்த்தவளுக்கு நிழல் தருகிறது.

தங்கமுத்து ஆச்சி வெற்றிலைச் சரையிலிருந்து சீவிய பாக்கை எடுத்து உள்ளங்கையில் போட்டு நெரித்து வெற்றிலைத் துண்டில் பூசிய சுண்ணாம்பைக் கசக்கி மணந்து, அபக்கென வாயில் போட்டுக் - குதப்பி மெல்லத் தொடங்கினாள்.

அவள் வெற்றிலை போட்டு அசை போடுவதே ஒரு அலாதி. அதைப்பார்த்து உமிழ் நீரை உள் விழுங்கிய முரளி மெல்ல ஓடி வந்து...

"ஆச்சி.... ஆச்சி.... எனக்கும் தாணை ஆசையாக் கிடக்கு"

என்று தன் பிஞ்சுக் கைகளை நீட்டி கெஞ்சிக் கொண்டு இருந்தான்.

அவனைப் பார்க்க: அவன் கெஞ்சுவதைப் பார்க்க தங்கமுத்து ஆச்சிக்குச் சிரிப்புத்தான் வந்தது. வாயில் நிறைந்த வெற்றிலைச் சாற்றை விரலின் இடுக்குகளால் கொப்பளித்து விட்டவள்.

"போடா போக்கிரி, இந்த வயதில உனக்கு வெற்றிலையோ? போடா போ.... பல்லை அரிச்சுப் போடும்."

அவள் செல்லமாகக் கண்டித்தாள்.

"அது கிடக்கட்டும். இப்ப தாறியோ? இல்லையோ?

அவன் அடம்பிடித்தான்.

"இதுகள் ஒரு சொல்லுப் பறைச்சல் கேளாததுகள். என்ரை ராசா இது கெட்ட பழக்கம் எல்லே. சின்னப் பொடியன் போடக் கூடாதெல்லே."

அவள் கெஞ்சினாள்.

அவன் மிஞ்சினான்.

"அப்ப நீ போடலாமோ. அது உனக்கு நல்ல பழக்கமோ?

ஆச்சி மலைத்துப் போனாள்.

அவன் ஆச்சியின் பதிலுக்குக் காத்திராமல் வெற்றிலைப் பையைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டான்.

ஆச்சிக்கு தூக்கி வாரிப் போட்டது.

சின்னப் பிள்ளையின் நியாயமான கேள்விக்குப் பதில் கூற அவளால் முடியவில்லை. அவள் கல்வி அறிவு இல்லாவிட்டாலும் பல விடையங்களை அலசி ஆராயும் ஆற்றல் உள்ளவள்.

"பெரியவர்கள் விடுகிற தவறுகளைக் குழந்தைகள் எப்படிப் பதிவு செய்து கொள்ளுகிறார்கள் என்ற உண்மையை ஒரு நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்டாள்.

தனது வயதும், அறிவும், அனுபவமும் அந்தச் சிறுவனிடம் தோற்று விட்டதை எண்ணிக்கூனிக் குறுகிப் போனாள்.

அவள் நிலத்தில் கையை ஊன்றி மெலல எழுந்தாள். முரளியுடன் ஓட்டப்போட்டி வைக்க அவளால் முடியவில்லை. வெற்றிலைப் பையைப் பறித்து அவனை அழவைக்கவும் விரும்பவில்லை.

அவன் இருந்த இடத்துக்கு வந்து அவனுக்கு பக்கத்தில் அமர்ந்தாள்.

"போட்டிட்டியாடா போக்கிரி"

முரளி பல்லெல்லாம் தெரியச் சிரித்தான். அவனது உதடுகளும் பற்களும் சிவப்பேறி இருந்தன.

"இந்தா உன்ரை பை'

"அதை வைச்சிரு. ஆசை தீருமட்டும் போடு"

முரளி அதிர்ந்து போனான். ஆச்சி இப்படிச் சொல்லுவாள் என அவன் எதிர்பார்க்கவில்லை. ஆச்சியை இமைகொட்டாமல் பார்த்தான். அவன் குறுகுறுத்த விழிகள் குளமாகின.

ஆச்சி கோபமா?

அவன் மெலிந்த குரலில் ஏக்கத்தோடு கேட்டான்.

"இல்லை நான் இனிப் போடமாட்டன்"

ஆச்சி சிரித்தாள்.

"ஆச்சி"

முரளி அழுதே விட்டான்.

"என்னால் தானே இனி நீ வெத்திலை போட மாட்டன் எண்டனி."

ஆச்சி அவனை அரவணைத்து கண்ணீரைத் துடைத்துவிட்டு...

"என்ரை குஞ்சு. அழாதையடா, நீ தான் என்னைத் திருத்தி விட்டாய். என்ரை மக்கு மூளைக்கு புத்தி வரையில்லை. இப்பதான் புத்தி வந்திருக்கு. நான் போடுகிறதும் கெட்ட பழக்கம் தான்."

"இப்பதான் உனக்குப் புரியுதா?"

புரிய வைச்சது நீ தானடா?

ஆச்சி! அவனை இறுக அணைத்துக் கொண்டான். அந்த இறுக்கத்துள் இன்பப் பிணைப்புக்குள் கிடந்துகொண்டே...

"ஆச்சி வெற்றிலை போடாமல் எப்படி இருப்பாய்? என்றான் முரளி.

"எல்லாம் மன உறுதியில தானடா கிடக்குது. இது பெரிய விடயம் இல்லை. இதை விடப் பெரிய இழப்புக்களைக் கண்டும் கரைந்து போகாமல் உனக்காக வாழுறன்"

ஆச்சி! நீண்ட மூச்சு ஒன்றை உதிரவிட்டு அமைதியானாள்.

ஆச்சி என்ன கூறுகிறாள் என்பதெல்லாம் அவனுக்கு பெரிதாக விளங்கவில்லை. ஆச்சியின் மடியில் கிடந்து கால்களை நீட்டி ஆட்டிக்கொண்டு கைகளால் ஆச்சியின் தாடையைத் திருப்பி அவள் விழிகளை உற்று நோக்கினான்.

அவன் கண்களில் லேசான நீர் வளையம்.

ஆச்சி அவனை அணைத்தபடியே...

என்ரை கண்ணா நீ அழக்கூடாது. உன்ரை கொப்பனையும் உப்பிடித்தான் தடவித்தடவி வளர்த்து அந்த அறுவான்களுக்கு இரை கொடுத்தனான்."

அவள் நினைவுகள் சுழன்றன.

இரண்டு மாதங்கள் தான் கழிந்திருந்தது. இன்னும் அந்த இரத்த வாடை வீசிக்கொண்டு தான் இருந்தது. திடிரென கிராமத்தைச் சுற்றி வளைத்து பல இளைஞர்களை அள்ளிக் கொண்டுபோன இராணுவ அணி, பெண்களை அசிங்கப்படுத்திய அந்த இராணுவ அணி இன்னும் அந்தக் கிராமத்தின் எல்லையில் தான் நிற்கிறது.

அவளுக்கு இப்போ இராணுவத்தைப் பற்றி அக்கறை இல்லை.

கமலம் வீட்டில் இருந்தால்...

கமலம் அன்று வீட்டில் தான் இருந்தாள். கணவன் இன்னும் வீடு வந்து சேராதது அவளுக்கு ஏக்கமாக இருந்தது.

"என்ன மாமி இவரை இன்னும் காணயில்லை"

வேலைக்குப் போனவன் வருவன்தானே நீ பயப்பிடாதை, தங்கமுத்து ஆச்சி ஆறுதல் கூறினாலும் அவளின் கருவறையும் துடிக்கத்தான் செய்தது.

கமலம் சாதாரணமான ஒருத்திதான். ஆனால் புத்தி சாதுரியம் மிக்கவள் கிராமத்தில் அவளுக்கு நல்ல பெயர் இருந்தது.

கிராம நலன்களிலும் அக்கறை காட்டியதுடன் போராட்டத்திற்கும் தன்னால் ஆன பணிகளைச் செய்தாள், அர்ப்பணிப்புடன் செயற்பட்டாள்.

அவளது உயர்ந்த பண்பும், பரிவும், பாசமும், உபசரிப்பும் போராளிகள் மீது கொண்ட கரிசனையும் போராளிகள் மத்தியில் நல்ல மதிப்பைத் தேடிக்கொடுத்தது.


அமலன் அவள் மீது உயிரையே வைத்திருந்தான். இளைய வயதினன். ஆனால் அவனே அப்பிராந்தியத் தளபதி. சிரித்த முகமும் இனிய பேச்சும் ஆழ்ந்த அறிவும், மக்கள் மீதுள்ள பற்றும் மற்றவர்களை அவன பால் ஈர்க்க வைத்தது.

அமலனைக் கண்டால் போதும், கமலம் தன்னை மறந்து விடுவாள். தன் உடன் பிறந்த தம்பியே அவன் என்பது அவள் நினைப்பாகி விடும். அத்தகைய உறவு அவர்களுள் சுடர்விட்டது.

கிராமத்தின் எல்லையில் கேட்ட வெடிச் சத்தம் கமலத்தை நிலைகுலைய வைத்தது. கமலம் துடிதுடித்துப் போனாள். அவளுக்கு காலும் ஓடவில்லை கையும் ஓடவில்லை.

''மாமி'' வெடி கேட்டுதெல்லே சிலவேளை அமலன்.

அமலனுக்கு என்ன?




ஆச்சியும் பதறிப் போனாள்.

"அப்பிடி ஒன்றும் இல்லை அவன் கெட்டிக்காரன்"

ஆச்சிக்கு அமலன் மீதும், திறமையின் மீதும் அதீத நம்பிக்கை.

அறுந்து போவார் ஆரையும் முடிச்சுப் போட்டு... பதுக்கி இருப்பாங்கள்.

ஆச்சி திட்டித்தீர்த்தாள்.

எத்தனை நாளைக்குத்தான் இந்தக் கொடுமைகளைத் தாங்கிறது. பெண்புரசு இருக்கேலாது. குழந்தை குஞ்சு திரியேலாது.

கமலம் பொரிந்து தள்ளிக் கொண்டே படலைப்பக்கம் திரும்பினாள்.

"எடி தங்கச்சி கமலம்"

வேர்க்க விறுக்க ஓடிவந்த பொன்னம்மான் மூச்சுவிடுவதற்கிடையில்

ஏன் குஞ்சியப்பு என்ன நடந்தது?

கமலத்தின் கைகால்கள் உதறல் எடுத்தது

"அதை எப்பிடிச் சொல்ல"

பொன்னம்மானின் தொண்டை கட்டிக் கொண்டது.

வார்த்தைகள் ஏழவில்லை. பொன்னம்மானின் விம்மல் ஒலிகேட்டு தங்கமுத்து ஆச்சியும் வந்துவிட்டாள்.

"என்னண்ணை பதட்டப்படாமல் சொல்லன்"

தங்கமுத்து ஆச்சி தைரியம் ஊட்டினாள்.

"என்னணை சொல்லன். நீயே அழுதால்?"

கமலம் அவர் தாடையைப் பிடித்து தன் பக்கமாகத் திருப்பினாள். வழிந்த கண்ணீரைத் துடைத்த போது அவள் கைகள் நடுங்கின.

"அடி எல்லாம் போச்சுதடி"

"என்னணை ஆரைச்சுட்டாங்கள்?

கமலம் உன்ரை தாலி போச்சுதடி.....

பொன்னம்மான் கதையை முடிக்க வில்லை.

என்ர ஐயோ என்ரை ராசா...

ஐயோ...ஐயோ.....என்ரை பிள்ளை....

தங்கமுத்து ஆச்சியும், கமலமும் மண்ணில் புரண்டார்கள்.

பொன்னம்மான் இப்போது அழவில்லை. இருவரையும் தூக்கி நிறுத்தினார்.

கமலம் அவரை விலக்கிவிட்டு தலைவிரி கோலமாக ஓடினாள்.

தன் கணவனின் வெற்றுடலைப் பார்க்க ஓடினாள்.

தங்கமுத்து ஆச்சியால் வேகமாக ஓட முடியவில்லை. ஆனாலும், அவளது அவலக் குரல் ஓங்கி ஒலித்தது.

தலையில் அடித்தபடியே ஓடினாள்.

கமலத்தின் கண்கள் மிரள மிரள விழித்தன. அவள் கண்முன்னே இரத்த வெள்ளத்தில் அவள் கணவன் கிடந்தான்.

ஒரு புறத்தில் அமலனும் நின்றான்.

சுற்றிவளைப்பில் அவனும் மாட்டிக்கொண்டானோ...?

வேதனை நெஞ்சைப் பிய்த்தது.

ஒரு நொடிப் பொழுதில் அவள் முடிவெடுத்தாள்

அமலனை மீட்க வேண்டும்.....

"ஐயோ என்ரை பிள்ளையைக் கொண்டு போட்டியளே கொலைகாரரே.

தங்கமுத்து ஆச்சி மகனின் வெற்றுடல் மீது விழுந்து கதறினாள்.

"ஐயா என்ரை புருசனை விடுங்கோ ஐயோ நான் பிள்ளைகுட்டிக்காரி -

அவள் - காவலில் நின்ற இராணுவவீரரை விலக்கிக் கொண்டு அமலனைக் கட்டிப்பிடித்தாள். "ஏய் இவன் உன்ரை புருசனா? பொய். இவன் புலி"

ஒரு இராணுவ வீரன் அதட்டினான்.

கமலம் அவசர அவசரமாக தன் சேலை முகதலைப்பால் அமலனின் முகத்தைத் துடைத்தாள்.

ஏய் பொய் சொல்லுறாய் போ...போ...

அந்த இராணுவ வீரன் கையிலிருந்த தடியால் அமலனை அடிக்கப்போனான்.

"ஐயோ அவரை அடியாதையுங்கோ"

அடி அவள் மீதுபட்டது. வேதனையைத் தாங்கிய படி அவள் கெஞ்சினாள்.

அமலன் போகும் படி சமிக்கை செய்தான்.

அவனை இன்னும் அவர்கள் இனங்காணவில்லை என்பதாய் அமைந்தது அவன் பார்வை. அவள் அசையவில்லை.

ஒரு இராணுவ வீரன் சப்பாத்துக்காலால் உதைத்தான். ஒரு அதிகாரி அவனை எழும்பு மாறு பணித்தான்.

அவள் மீண்டும் அமலனைப் பற்றிக் கொண்டாள்.

"அவனை விடுங்க........ போகட்டும்......"

அதிகாரி கட்டளையிட்டான்.

கமலம் அவனை இழுத்துக் கொண்டு ஓடினாள். அவளுக்கு மூச்சு வாங்கியது!

"அமலன் நீ ஓடு...."

எங்கிருந்தோ வந்த ஒருவன் அதிகாரியின் காதில் முணுமுணுத்தான்.

அதிகாரியின் துப்பாக்கி முழங்கியது.

அமலன் தப்பிவிட்டான்.

ஒரு போராளியைக் காப்பாற்றிய பெருமையோடு கமலம் அமைதியாகக் கண்களை மூடிக்கொண்டாள்.

தங்கமுத்து ஆச்சியின் விழிநீர் உதிரமாகக் கசிந்து கொண்டிருந்தது.

"அவள் முரளியைப் பார்த்தாள்."

அட அதுக்கிடையில நித்திரையாப் போனியே. தூங்கடா கண்ணா தாலாட்டே இல்லாத தூக்கம்.

விழிகளைத் துடைத்துக் கொண்டாள் தங்கமுத்தாச்சி.

முருகு பாரிமகன்

# வயல்

மென்பச்சைத் திரைபோர்த்த
மோகனத்தில் மனசிழந்து
முன்பெல்லாம் நானந்த
வயல் வரம்பில் நின்றிருப்பேன்!
முகத்தில்
நெல்தடவிவந்த
தென்திசையின் காற்றுத்தன்
முத்தம் பதித்தகலும்
முழுசாகாச் சின்னக் கதிர்மணிகள்
தலை எட்டி முறுவலிக்கும்,
வெள்ளாமைக் குள நீரில்
விரால் கெண்டை மீன்களது
நீச்சல் கவனித்து
நீள் தவத்தில் நின்றிருந்த
கொக்குகளின் கூட்டம் - ஓர்
வெண் குடையாய் மேலெழும்பும்,
மேற்கில் ஒதுக்குகிற
பொன்னிறத்துச் சூரியனின்
புன்னகையில் என் புலவின்
பொலிவு அதிகரிக்கும்,
புது உழவு
கண்ட தரை மேலென்
கால் பதியப் புல் அரிக்கும்
உள்ளம் புளங்ககிக்கும்
பாட்டன் அவர் பூட்டனென்றெம்
பத்துப் பரம்பரையின்
பாதம் பதித்த நிலம்!
புல்லுப் பிடுங்கிப்
புதுக் கலப்பை
பூட்டிப் பெரிய வன்னிக்
காளை பிடித்துழுது - பெருக்கெடுக்கும்
ஊற்றாய் வியர்வை ஒழுகி விழ
ஏற்றம் இறைத்து நீர்பாய்ச்சி
எருதூவிப்
போட்ட 'கறுப்பன்'நெல்
பொலிந்து கதிராகித்
தேட்டந் தரும் போது
தேற் மகிழ்வில் நான்
திளைத்து எழுந்த நிலம்!
தோள் கொடுத்தெம் சோகப்
பாரம் சுமந்த நிலம்!...
...நீட்டு வரம்புகளில் நினைவுகளை
மீட்டு நடை பயில்வேன்!
சிட்டுக் குருவிகளின்
பாட்டுக்கு ஏற்றபடி,

இன்றைக்கும் வயலிருக்கும்,
தென்திசையின் காற்றிருக்கும்
கந்தகத்தின் வாசக் கலப்போடு,
சோகச் சுதி இழையச்
சிட்டுக் குருவிகளின் பாட்டிருக்கும்,
பெயர்ந்த வரப்புகளில்
பெயரறியா மனிதர்களின் பூட்ஸ் காலடையாளம்
பயமுறுத்தி எச்சரிக்கும்,
உயர்ந்து வளர்ந்த
முட்புதரால் மூடுண்டு
முழுவதற்கும் புல் முளைத்து
உப்புத் தரையாகி
உயர் பாதுகாப்பான
வலயத்தில் வரண்டழிந்து
இன்றைக்கும் எந்தன் முதுச வயல் அங்கிருக்கும்!

ஜெ.பிறேம்குமார்.



# வெற்றி முகங்கள்

காற்று வீசி... அடங்கியது... இருளில்
ஊர்ந்து படர்ந்த என் ஊர் மீது
பாம்புகளின் செட்டை

பச்சை நிறங்கள் சிரித்தது
சா குரல் தினமும் தினமும்
மௌனக் குகைக்குள்

விடுதலைக் காற்று வீசிய
இடம் எல்லாம்
எரிதணலின் சாம்பல்கள்

வெற்றியின் முகங்கள்
எங்கும் பறைசாற்றல்கள்
கடற்கரை மணல் மீது

ஓடி விளையாடும்
சிறு மழலைகளின் முகங்கள் - என்
நினைவுப் பெட்டகத்தில்
வெற்றியின் முகங்களாய் என் விழிகளில்

ப.பவித்திரா.

# நூல் அகம்




நூலின் பெயர்:- 'வேலி' (கவிதைத் தொகுப்பு)
எழுதியவர் :- செ.றமணா
வெளியீடு :- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண் கலை மன்றத்தின் வெளியீடுகள் வரிசையில் "வேலி" என்ற கவிதைத்தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 4 ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர் (சித்திரத்துறையைச் சேர்ந்த) செ.றமணாவின் கவிதைகளும் சித்திரங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஓவிய ஆசிரியராகத் திகழப் போகும் இளம் ஓவியரின் கவிதைத் தொகுதியின் அட்டைப் படம் அவரின் சிறப்பான படைப்பாகவுள்ளது. அவரது கவிதைகள்கூட சிறப்பானதொரு புதியதொரு பொருட்புலத்தைக் கொண்டமைந்துள்ளன.

தமிழ், தமிழ்க் கலாசாரம் என்பவற்றின் மீது பற்றுக் கொண்ட இவர் - பொதுவான சமூக அம்சங்களூடாகத் தன் புறச் சூழலைக் கவியாக்கியுள்ளார். 25 கவிதைகளைத் தொகுத்துள்ள இந்தத் தொகுப்பில், இவர் ஒரு ஆசிரியர் என்றவகையில் சமூகத்தில் புரையோடிப் போன தேவையற்ற கீழ்த்தரமான நடைமுறைகளைச் சுட்டிக்காட்டி புதிய திசையில் தனது கவிதைகளை நகர்த்தியுள்ளார்.

முதல் கவிதையில் தமிழ் மீதுள்ள பற்றை வெளிக்காட்டும் றமணா, கலாசாரம் பற்றி அவர் கொண்ட கரிசனையால் "சேலைக்கு என்ன கேள்வி" என்ற கவிதையில் கலாசாரப் பிறள்வுகளைக், குறிப்பாக ஆடை அலங்காரங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். இடப்பெயர்வின் துயரைக்காட்ட "போதுமினிப் போர்" என்ற கவிதையில், இடப்பெயர்வின் துயர அனுபவங்களை எடுத்துக்கூறுகின்றார். இன்றைய சமூகச் சீரழிவைக் கண்டு கண்டிக்கும் இவர், சமூகச் சீரழிவைக் காட்டியுள்ளார். இதில் கலாசாரச் சீரழிவால் தாய்மைக்கு ஏற்படும் இழுக்கைக் கூறும் இவர், அடுத்த கவிதையில் "நான் கண்ட இறை" என்று தாய்மையின் புனிதத்தைப் போற்றியுள்ளார்.

இன்றைய சமாதான நிலையில் தேசிய கடமைபற்றிய தனது மன உணர்வை "நாடும் வீடும்" என்ற கவிதையின் படைப்பில் நீர் சுமந்துவரும் சிறுவனின் காற்சட்டை களன்று போகின்ற நிலையில் அவன் எதனைப் பிடிப்பான் என்ற படிமத்தோடு மனச் சஞ்சலத்தைக் காட்டியுள்ளார்.

பட்டை முக்கியம்
"நீர்" அதுவும் முக்கியம், வரிசையில் நின்றெடுத்த நீர் என்று சிந்திப்பைத் தூண்டிவிடுகின்றார்.

இழுபறியாகிய ஒரு பிரசவத்தைக் காட்டி அதன் ஊடாக இன்றைய சூழ்நிலையைக் காட்டுகிறார்.

அழகிய சொல்வடிவங்களாக அடுக்கி சொற்சிலம்பாக நகரும் இவரது கவிதைகள் வாசிக்க வாசிக்க இன்பம் பயப்பதாக உள்ளன. அடுக்கு மொழிக் கையாள்கையும் சிறந்த அந்த அமைப்பும், உருவக உருவமைகளும் இவரின் கவிதைகளுக்கு அழகு சேர்த்துள்ளன.

படிமங்களாக சில பிரச்சினைகளைக் கையாண்டு தனது கவிதை ஊடாக முன்வைத்துள்ளார். இவரது கவிதைகளூடாகப் புதிய முனைப்பு தென்படுகிறது.

இவரது சித்திரங்கள் எல்லாம் பார்த்தவுடன் இனம் காணக்கூடியதாகவுள்ளது. ஒரே வகையான ரேகைகளின் போக்கு சிறப்பாகவுள்ளது.

- சோ.சி. சிவானந்தராஜா

| | |
|---|---|
| தலைப்பு - 'மார்கழித் தீஞ்சொட்டு' | வெளியீடு - செந்தூரன் பதிப்பகம் |
| ஆசிரியர் - வடலியூரான் (கவிதைத் தொகுப்பு) | விலை - 100/= |




இது ஒரு தீஞ்சொட்டு என்பதை மறுப்பதற்கில்லை. போதியளவு அம்சங்கள் காணப்படுகின்றன. பல்வேறு விடயங்கள் கருப்பொருளாகக் கொண்டு கடுகச் சிறுக்கி எடுதப்பட்டுள்ளது.

அநேகமாக சிந்தாந்தக் கருத்துக்கள் பொதிந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அதற்காக இளையவரையும் இது தவிர்த்துவிடவில்லை.

இது மரபுக் கவிதைகளைச் சாராவிட்டாலும், ஓரளவு மரபை ஒட்டி, உரசிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. புதுக்கவிதை என்னும் தலைப்பில் அவர் புதுக்கவிதை ஒன்றையே அமைத்துவிட்டார்.

**ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான பேரறிவாளனின் தாயான அற்புதம் அம்மா மகனை மீட்கப் போராடும் உண்மைக் கதையை "தொடரும் தவிப்பு" என்ற தலைப்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த மூத்த பழம் பெரும் அரசியல்வாதியான பழநெடுமாறன் ஐயாவின் மகளான உமாவினால், பூங்குழலி என்ற புனை பெயரில் எழுதிவெளியிட்டுள்ளார். இந்த நூலுக்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த கவிஞர் அறிவுமதி எழுதிய முன்னுரையை இலக்கிய வாசகர்களுக்காகத் தருகின்றேன்.**

# அம்மா வலி தோப்பு வலி

அம்மா வலி
தோப்பு வலி

அம்மா மழை, அம்மா நெருப்பு, அம்மா அமைதி, அம்மா போர், கனிதல்... துணிதல்... பொறுத்தல்... ஒறுத்தல் எல்லாம் அம்மா.

பால் கொடுப்பாள்
குருதியும் குடிப்பாள்
உறங்குகையிலும் விழித்திருப்பாள்
திணறுகையில் வழி திறப்பாள்.

அம்மா வலிக்குள்ளிருந்துதான் அனைத்து விடுதலையும். அம்மா வலி வாங்காமல் உலகைக் கழுவ முடியாது.

அம்மா வலி தோப்பு வலி
ஒற்றைக் குழந்தைக்கு இரட்டை மார்பு...
அது அம்மாவின் மனவளம்.
உலகக் குழந்தைகளுக்கு ஒரே மார்பு...
இது அம்மாவின் களவளம்.

களவளம் செழித்து அம்மாக்களுக்கு... பெற்ற போது கிடைத்த அம்மா வலியைக் காட்டிலும் அவளை/அவனை வாழ்வை அழவு செய்பவளாய்/செய்பவனாய் பெற்றபோது கிடைத்த அம்மா வலியே உயரிய வலி.

ஆதிநாள் தொட்டு அடங்கா உறுதிதான் தாய்மையாய் அடையாளப்படுகிறது. நினைக்கையில்தான் அது நெகிழ்வு. நிகழ்கையில்... அது கொற்றவைப்பாறை. அன்பு அம்மா. அருள் அம்மா. அறிவு அம்மா. அன்பு அம்மாக்களை... அருள் அம்மாக்களை மூட நம்பிக்கைகளால் முடக்கி வைக்கலாம்.

அறிவு அம்மாவை என்ன செய்ய இயலும். பகுத்தறிவின் ஒளிகுடித்து விழித்த அம்மா அறிவு அம்மா. பெரியார்க்கிழவனின் நடுங்குதலற்ற மகள்... அறிவு அம்மா.

எல்லா அம்மாக்களும் இயல்பான அம்மாக்களாகத்தான் இருக்கிறார்கள். அறமற்ற அரசியலின் அத்துமீறல்கள் தாம் அவர்களை வரலாற்று அம்மாக்களாக மாற்றி விடுகின்றன.

அவரைப் பந்தலின் கீழ் தம் குஞ்சுகளை மேயவிட்டு அழகு பார்க்கிறவரை அது தாய்க் கோழிதான். அவற்றைச் சீண்டிப் பார்க்க பருந்து சடக்கென நுழைகையில்... அது தாய்க் கோழியன்று... போர்க்கோழி.

இந்த நூல் நெடுக... அதன் படபடப்பைத்தான் பக்கத்துக்குப் பக்கம் பார்த்துச் சிலிர்க்கிறோம்.

பத்துத் திங்கள் உள்ளுறையில் வைத்துத் தடவித் தடவிப் பார்த்து வளர்த்த பிள்ளையை... வெளியில் பார்க்க ஒரு தாய்க்கு எவ்வளவு தவிப்பு இருக்கும். எம் அம்மா எத்தனை ஆண்டுகள் உள்ளறையில் வைத்து வதைபடும் பிள்ளையை... வெளியில் பார்க்க ஆவல் படுகிறார்கள்!

அதற்கும்கூட அந்த அம்மா கூறியது... இப்போதும் எனக்குள் கேட்கிறது...

"என் மகனைக் குற்றமற்றவன் என்று அறமன்றத்தின் அடிக்கோடிட்ட தீர்ப்பின் வழியே வெளியே கொண்டு வரவேண்டும் என்று நினைப்பது.

எனக்கும் என் மகன் கிடைத்து... அவனுக்கு மணம் முடித்து... பேரக் குழந்தைகளைப் பார்த்துக்கொஞ்ச வேண்டும் என்பதற்காக அன்று.

எம் இனத்துக்காக... எம் மொழிக்காக தம் அறிவை... ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக!"

இத்தகைய அம்மாக்களை... அங்கங்கே நாம் வரலாற்றில்... இலக்கியங்களில் கண்டிருக்கிறோம்.

ஆனால் இந்த அம்மாவை... தமிழ் நாட்டின்... தமிழ் மொழியின் நலனுக்காக எங்கே ஒரு கூட்டம் நடந்தாலும்... போராட்டம் நடந்தாலும் அங்கே தோளில் ஒரு பையோடு காணலாம்.

மறுநாள் மகனுக்கான தீர்ப்பு. முதல்நாள் பாவேந்தர் பாடலுக்கு ஆடும் மழலையின் ஆட்டத்தில் ஈர்ப்பு.

இப்படிப் பொதுவாழ்விலும்... தம் துணைவர் குயில்தாசனின் தொடர்ச்சியால் ஈடுபட்டுக்கொண்டு... அறிவின் விடுதலை நாளுக்காகவும்... அல்லும் பகலும் அல்லாடுகிற அம்மாவின் நிகழ் வரலாற்றைத்தான் தங்கை பூங்குழலி இலக்கியமாக்கியிருக்கிறார்.

தமிழின வரலாற்றில்... தமிழினத் தந்தை, தமிழினத் தம்பி விரும்பிய இத்தகைய துணிவு - செழிந்த அறிவுப் பெண்களின் எண்ணிக்கை பெருகிப் பல்க... தங்கை பூங்குழலியின் இந்த அறிவு அம்மா நூல் பயன்படட் டும்.

தங்கைக்குப் பரிசளித்த 'தம்பியின் எழுதுகோல் அதன் பணியைத் தொடங்கியிருக்கிறது. தங்கையின் எழுத்துப்பணி தொடர்க வெல்க.'

-அறிவுமதி-

# தேடலும் பகிர்தலும்

## கனவுகள் - 3

ஓவியக் காட்சிச் சாலையொன்றில் ஒவ்வொரு படைப்பாக ரசித்துக்கொண்டுவருகிற ஓரிளைஞன் - அவனும் ஒரு இளம் ஓவியன் என்பது அவன் கொண்டுசெல்லும் ஓவியப் பலகை, தாங்கு சட்டம் போன்றவற்றிலிருந்து தெரிகிறது. மேதை வான் கோவின் சித்திரிப்புகளில் தன்னை மறந்து, ஆழ்ந்துவிடுகிறான்.

வான்கோவின் புகழ்பெற்ற 'பாலம்' ஓவியத்தையே பார்த்துக்கொண்டு நிற்கிறவன் முன்னால், ஓவியம் உயிர்பெற்றுவிடுகிறது. பாலத்தின் நடுவில் நின்ற குதிரைவண்டி ஓடவும், பாலத்தினடியிலிருந்த நீர், மெல்லலைகளாய் அசையவும் ஆரம்பிக்கின்றன. ஆற்றங்கரையில் துணி அலம்பும் பெண்களுங்கூட இயங்கத் தொடங்கிவிடுகிறார்கள். அவர்களருகில் போய் இந்த இளைஞன் கேட்கிறான், 'வான்கோ இந்த வழியால் போவதைக் கண்டீர்களா?'

'இப்போதுதான் இந்தப் பாலத்தைத் தாண்டி அந்தப் பக்கம் போனார்' என்று ஒருத்தி காட்டுகிறபோது, மற்றவள், 'கவனம், அவர் இப்போதுதான் மனநலவிடுதியொன்றில் இருந்துவிட்டு வந்திருக்கிறார்' என்கிறாள். இளைஞன் ஓவியரைத்தேடி நெதர்லாந்தின் கிராமப்புறமெல்லாம் அலைகிறான். அந்தக் கிராமங்களும், சோள வயல்களும் வான்கோவின் கைவண்ணத்தில் உருவான காட்சிகளே.

கடைசியில் ஒரு வயல் நடுவில், தன்னந்தனியே, தன் படைப்பில் தீவிரமாய் ஒன்றியிருக்கும் ஓவியரைக் கண்டுபிடிக்கிறான். இவனோடு பேசுவதற்குக்கூட அக்கறை இல்லாதவராய்த் தன் முழுச் சக்தியையும் சிருஷ்டியிலேயே செலவிடும் ஓவியர், 'உன்னோடு பேசுகிற நேரத்தை ஓவியத்தோடு செலவிட வேண்டும்' என விரைகிறார். அவரைத் துரத்திச் செல்கிறவனின் முன்னால், அடிவான் தொலைவில் நடந்து மறைகிற அவர் தென்படுகிறார். ஓவியர் மறைகிற வான் விளிம்பிலிருந்து காகங்கள் கிளம்பி, கூட்டங்கூட்டமாய்க் கத்தியபடி பறக்கத் தொடங்குகின்றன. சுயநினைவுக்குத் திரும்புகிற இளைஞன், இப்போது, 'சோள வயலும் பறவைகளும்' என்கிற வான்கோவின் - கடைசி? - சிருஷ்டியின் முன் நின்று கொண்டிருக்கிறான்.

'கனவுகள்' குறும்படத் தொகுப்பின் அடுத்த - ஆறாவது - படமான 'ஃபியூஜி சிவக்கிறது', இன்றைய உலகப் போக்குகளின் பின்னணியில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

இப்போது முன்னூறு ஆண்டுகளாக மௌனங்காக்கும் ஃபியூஜி எரிமலை பின்னணியில் தெரிய, அந்தரித்து ஓடும் சனங்கள் 'ஃபியூஜி குமுறத் தொடங்கிவிட்டதா?' என்ற கேள்வியும் 'இல்லை, இது அதனிலும் பெரிது. ஆறு அணு உலைகள் வெடித்து விட்டிருக்கின்றன' என்ற பதிலும் வருகின்றன. குமுறும் தீயும், புகையும் சனங்களைத் துரத்துகின்றன. 'எங்கே போவது? அணு வீச்சுக்கு ஒளிக்க ஜப்பானே போதாது!'

சனங்கள் எல்லாம் மறைந்து ஐந்தேபேர் எஞ்சுகிறார்கள். இரண்டு குழந்தைகளும் அவர்களின் பெற்றோருமான ஒரு இளங் குடும்பம்; நன்கு கற்றவராய்த் தோன்றும் ஒரு நடுத்தர வயது மனிதர். 'எங்கே போய் விட்டார்கள் எல்லோரும்?' 'கடலுக்கடியில்' என்று அவர்கள் நின்றுகொண்டிருக்கும் பாறைகளின் கீழ்த்தெரியும் கடலைக் காட்டுகிறார், அவர். 'டொல்ஃபின்கள் கொடுத்து வைத்தவை, நீந்தித்தப்பிவிடும்' என்று சொல்கிறவருக்கு அவர் சொல்கிறார், 'அது சரிவராது, கதிர்வீச்சு எதையுமே விட்டு வையாது!' வெவ்வேறு வண்ண முகில்களாய்ப் பரவும் நச்சுவாயுக்கள் அவர்களை அண்மிக்கின்றன. 'எல்லாமே விஷந்தான். வண்ணமூட்டியதன் பயன் எந்த விஷத்தால் சாகிறோம் என்பதை அறிவது மட்டுந்தான்' என்கிறார் அந்த ஆள்.

'வெடிக்காது, பாதிப்பில்லை, ஆபத்தில்லை என்றெல்லாம் உறுதி சொன்னார்களே, பொய்யர்கள்!' அந்தப் பெண் குமுறுகிறாள், 'அவர்களைத் தூக்கில் போடாவிட்டால் நானே கொல்வேன்!' என்கிறாள். 'அதற்கெல்லாம் அவசியமே இராது, அம்மா என்கிறார் அவர். 'கதிர்வீச்சு உடனடியாகக் கொல்லாதுதானே?' என்கிறான் கணவன். 'சாவுக்குக் காத்திருப்பதன் பொருள் வாழ்வது என்பதல்ல!' அந்த மனிதர் சொல்கிறார். 'நாங்கள்தான் ஏதோ வாழ்ந்தோம், இந்தப் பிஞ்சுகள் என்ன பாவம் செய்தன? 'என்று அரற்றுகிறவள் அந்த மனிதனைக் கேட்கிறாள், நீங்கள் யார்?'

'நீ குறிப்பிட்ட கொல்லப்படவேண்டியவர்களில் ஒருவன்!' என்கிற அவர், அருகே நெருங்கும் புகை மண்டலத்தை அவர்கள் அச்சத்துடன் நோக்கும்வேளையில் கடலுள் பாய்ந்துவிடுகிறார். இனி ஓட இடமில்லாத அந்த விளிம்பு, எல்லாவற்றினதும் விளிம்பாய் எம்முன் தோற்றமெடுக்கும் வேளையில், என் மனதில் தோற்றமெடுத்துக்கொண்டிருந்தவை இரண்டு: கூடாங்குளமும், கல்பாக்கமும்! - சாந்தன்.

# நிவாரணப் பொருட்கள் கொண்டு செல்ல ஓமந்தை முகாமில் புதிய நடைமுறை

முல்லைத்தீவு, கிளிநொச்சி உட்பட பாதிக்கப்படடவர்களுக்கு உதவுவதற்கான நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்பவர்கள், தாங்கள் கொண்டு செல்லும் பொருட்களின் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்லும் வாகனங்கள் விரைவாகச் சோதனையிடப்பட்டு, பிரயாணத்தைத் தொடர்வதற்கான ஏற்பாடுகள் ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடியில் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியில் இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் உதவும் பொருட்டு, பொருட்களைக் கொணடு செல்பவர்கள், கொண்டு செல்லப்படும் பொருட்களின் விபரப்பட்டியலின் மூன்று பிரதிகளைக் கொண்டு வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதை மேற்பார்வை செய்து உதவுவதற்காக, வவுனியா செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். அண்மையில் வவுனியா செயலகதத்தில் நடைபெற்ற வடமாகாண அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்ட முக்கிய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து. சோதனை நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கையை வவுனியா அரசாங்க அதிபர் எஸ்.சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

நிவாரணப் பொருட்களை ஏற்றி வரும் வாகனங்களின் பதிவுப்புத்தகம், காப்புறுதி, வாகன வரிசெலுத்தியதற்கான ஆவணம், சாரதி அனுமதிப்பத்திரம், சாரதியின் தேசிய அடையாள அட்டை போன்ற வழமையாகக் கோரப்படும் ஆவணங்களின் மூலப்பிரதிகளையும், போட்டோப் பிரதிகளையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 30.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றன.

நேற்று முன்தினம் மலை 5 மணியிலிருந்து நேற்று காலை 9 மணிவரையில் 30.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என மன்னார் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

மழை வெளளத்தால், பாதிக்கப்படட பின்தங்கிய கிராம மக்களுக்கு இதுவரை நிவாரணம் வழஙகப்படவில்லை.

கோரக்கன்கட்டு, சுண்டிக்குளம், இரணைமடு, சாந்தன் குடியிருப்பு, முறிகண்டி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்கள் கடந்த பருவகால மழையால் பெரிதும் பாதிககப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான வெள்ள நிவாரணம் எதுவும் இதுவரைவழங்கப்படவில்லை.

அரசு தனது அரசியல் இலாபம் கருதி, உதவிகள் அனைத்தையும் தென்னிலங்கை வாழ் மக்களுக்கு அனுப்பிய வண்ணமுள்ளது. அரசின் இத்தகைய பாரபட்சமான நடவடிக்கையால் தமிழர் தாயகப் பிரதேசத்தில் குறிப்பாக வடக்கு - கிழக்கு வாழ்மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதனை கருத்திற் கொண்டு, சம்பந்தப்பட்ட அரச, அரச சார்பறற நிறுவன அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேணடும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாடசாலைகளில் மக்கள் தங்கியுள்ளதால் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாக, இடம் பெயர்ந்த மக்களில் - வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள 8 நலன்புரி நிலையங்களில் 2ஆயிரத்து 116 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 924பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஆழியவளை, வெற்றிலைக் கேணி கிராமங்கள் தவிர்ந்த ஏனைய கிராம மக்கள் அனைவரும் தத்தமது கிராமங்களிலுள்ள பாடசாலைகளிலேயே தங்கவைக்கபபட்டுள்ளனர்.

போக்கறுப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 137 பேரும், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் 228 குடும்பங்களைச் சேர்நத ஆயிரத்து 202 பேரும், வெற்றிலைக்கேணி நலன்புரிநிலையத்தில் 215 குடும்பங்களைச் சேர்ந்த 816 பேரும், ஆழியவளை நலன்புரி நிலையத்தில் 440 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 497பேரும், உடுத்துறை மகாவித்தியாலயத்தில் 533 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 602 பேரும், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் 398 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 733 பேரும், செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 182 குடும்பங்களைச் சேர்ந்த 573 பேரும், செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 170 குடும்பங்களைச் சேர்நத 615 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசப் பாடசாலைகள் இந்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பித்தபோதும் பாடசாலைகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்படாமையினாலும், மக்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறாமையாலும் இந்தப் பிரதேசப் பாடசாலைகளில் கற்றல்,கற்பித்தல் நடவடிக்கைகள் முற்று முழுதாக ஆரம்பிக்கப்படவில்லை. (21)

# முல்லைத்தீவு பதிவாளர் அலுவலகம் நாளை முதல் பிரதேச செயலகத்தில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் இது வரை உயிர் இழந்தோரில் 2 ஆயிரத்து 54 இறப்புக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதென, முலலைத்தீவு மேலதிக மாவட்டப் பதிவாளர் எம். சணமுகநாதன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

சுனாமி கடற்கொந்தளிப்பால் மாவட்டப் பதிவகம் சேதமடைந்துள்ளது. இதனால் புதுக்குடியிருப்பு, முள்ளியவளை மற்றும் சில நலன புரி நிலையங்களுக்குச் சென்றே இறப்புக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

மாவட்டப் பதிவகத்தின் 70 வீதமான ஆவணங்கள் சேதம் அடைந்துள்ளன. 30 வீதமான ஆவணங்களை ஓரளவு பெற்றுக் கொள்ள முடியும். அலுவலகத்தின் உள்ளே வந்த கடல் நீர் - மேசைகளின் மீதிருந்த ஆவணங்களை வெளியே அள்ளிச் சென்றுவிட்டது. இதே வேளை சுவர்கள் இடிந்து வீழ்ந் துள்ளமையாலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

போட்டோ பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம் என்பன பாவிகக முடியாதவாறு சேதமடைந்துள்ளன. இங்கு வட - கிழக்கு உதவிப் பதிவாளர் நாயகம் நேரில் வந்து பார்வையிட்டுள்ளார். அத்துடன் பதிவாளர் நாயகத்துக்கும் சேதங்கள் தொடர்பான விபரங்கள் அனுப்பட்டுள்ளன.


முல்லைத்தீவு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் - நாளை முதல் முல்லைத்தீவு செயலகத்தில் தற்காலிகமாக இணைந்து இயங்கவுள்ளது. நாளை முதல் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நலன்புரி நிலையத்தில் உள்ளமக்களுக்கு பளை தபாலகத்தால் தபால் விநியோகம்

சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாக, இடம் பெயர்ந்த பளை அஞ்சல அலுவலகத்துடன் இணைந்து இயங்கி வரும் தாளையடி, முள்ளியான் உபஅஞ்சல் அலுவலகங்கள தமது எல்லைக்குட்ட பிரதேசங்களில் - நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான கடிதங்களை அஞ்சல்காரர் மூலம் விநியோகித்து வருகின்றன.

வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் தத்தமது கிராமங்களுக்கு அண்மையில் நலன்புரி நிலையங்களல் தங்கவைக்கப்பட்டுள்ளனர. கடற்கரையில் இருந்து சுமார் 800 மீற்றருக்கு அப்பாலுள்ள சொந்த வீடுகளில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். இதனை கருததிற் கொண்டு தாளையடி முள்ளியான, ஆளியவளை உப அஞ்சல் அலுவலகங்களை மீண்டும் அந்தந்த இடங்களில் இயங்குவதறகு வடமாகாண பிரதி அஞ்சல மா அதிபர் நாயகம் அனுமதி வழங்கியுள்ளார்.

சுனாமி கடற்கொந்தளிப்பின் போது முற்றாகச் சேதமடைந்த செம்பியன்பற்று, சுண்டிக்குளம் உபஅஞ்சல் அலுவலகங்கள், அலுவலக பாவனைப் பொருட்கள் கிடைத்த பின்னரே சொந்த இடங்களில் இயங்குவதற்கான அனுமதி வழங்கப்படலாமெனத் தெரியவருகிறது. (21)





சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் உதவிப் பொருட்கள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். படம் - சு.பாஸ்கரன்




## வடமராட்சி கிழக்கு பகுதியில் 18 இடைத்தங்கல் முகாம்கள்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களை குடியமர்த்தும் வகையில், 18 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த முகாம்களை அமைக்கும் பணியில் பாதிக்கப்பட்டோருக்கான ஒருங்கிணைப்பு செயலணி ஈடுபட்டுள்ளது. இந்த இடைத்தங்கல் முகாம்களில் ஆயிரத்து 933 குடும்பங்கள் குடிய மர்த்தப்படவுள்ளன.

தற்போது இந்த மக்களுக்கான பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம், தமிழீழ சுகாதார சேவையாளர், பட்டினிக் கெதிரான இயக்கம், யுனிசெப் நிறுவனம் போன்ற அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஜனவரி 24**

**1616** :-தென் அமெரிக்காவின் தென் முனையை டச்சு நாட்டு கடலோடியான 'வில்லியம் கார்னெலிஸ் ஸ்கௌட்டன்' என்பவர் கண்டுபிடித்த நாள் இன்றாகும். இவர் அந்தமுனைக்கு தனது பிறந்த ஊரை நினைவுபடுத்தும் வகையில் 'கேப்ஹோர்ன்' என்ற பெயரைச் சூட்டினார்.

**1818** :-கலிபோர்னியா நாட்டின் சட்டர் ஸ்மில் என்ற இடத்தில் தங்கம் இருப்பது இன்று கண்டறியப்பட்டதையடுத்து ஒரு வருடகாலப் பகுதிக்குள்ளேயே அமெரிக்காவின் பல பகுதிகளில் இருந்தும் அங்கு சென்று பல்லாயிரக் கணக்கானோர் குடியேறினர்.

**1908** :-பேடன் பவல் பிரபு தனது முதல் சாரணர்படையை ஆரம்பித்த தினம் இன்றாகும்.

**1946** :-லண்டனில் கூடிய ஐக்கிய நாடுகளது பொதுச் சபை அணு ஆற்றலைப் பயன்படுத்துவதை நெறிமுறைப்படுத்த தனியான ஒரு ஆணைக்குழுவை அமைக்கவேண்டும் என்ற தீர் மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

**1950** :-'ஜனகனமன' என ஆரம்பிக்கும் கீதம் இந்தியாவின் தேசிய கீதமாக இன்று அறிவிக்கப்பட்டது.

**1966** :-அன்னை இந்திரா காந்தி, இந்தியாவின் பிரதமராக முதன்முறையாக பதவி ஏற்றநாள் இன்றாகும்.

**1978** :-ரஷ்யாவினால் செலுத்தப்பட்ட அனுசக்தியினால் இயங்கும் புலனாய்வு செயற்கைக் கோள் ஒன்று - இன்று கனடாவின் வடமேற்குப் பகுதியில் நொருங்கி விழுந்தது.

**1985** :-டிஸ்கவரி என்ற விண்வெளி ஓடம் அமெரிக்காவால் இன்று செலுத்தப்பட்டது. இது மூன்று நாட்களில் 49 முறை புவியைச் சுற்றி வந்தது.

**1986** :-'வாயேஜர' என்ற விண்கலம் யுரேனஸ் கிருகத்துக்கு அருகில் இன்று சென்றடைந்தது. 1977 ஆம் ஆண்டில செலுத்தப்பட்ட இந்த விண்கலம் யுரேனசைச் சுற்றி அமைந்துள்ள வளையங்களையும், புதிய சந்திரன்களையும் கண்டுபிடித்து பூமிக்கு அறியத்தந்தது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை அவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இத்தால் சர்வதேசம் அறிவது யாதெனில்.....

ஏற்கனவே கடந்த இருவாரங்களாக நாம் இந்தப் பகுதியில் வலியுறுத்திக்கூறிவந்த சில முக்கிய விடயங்கள் - நேற்று முன்தினம் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கும், நோர்வே வெளிநாட்டமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினருக்குமிடையே நடைபெற்ற முக்கியத்துவமிக்க சந்திப்பின்போது பேசப்பட்டுள்ளமையானது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இருதசாப்தத்திற்கும் அதிகமான காலம் நடைபெற்ற போர்காரணமாக, இனவாத சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்கள்மீதும், அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்கள்மீதும் ஏற்படுத்திய துயரவடுக்களின் தாக்கங்களாக - ஆழ்மனக் காயங்கள் யாவும் இன்னமும் ஆறாத ரணங்களாகவே தொடரும்வேளையில், இடிக்குமேல் இடியென சுனாமி ஆழிப்பேரலை ஏற்படுத்திய சங்காரமும் நிகழ்ந்து முடிந்துள்ளது. இதன் காரணமாக வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அன்றாடவாழ்வு என்பது முற்றுமுழுதாக புத்துயிர்ப்புக் கொடுக்க வேண்டியதாகிவிட்டுள்ளது.

இழப்புக்களையும், துயரங்களையும், அரசின் மனிதநேயமற்ற புறஅழுத்தங்களையும், ஆயுதப்படையினர் மற்றும் குழுக்களின் மனிதநேயமற்ற அடக்குமுறைகளையும் சந்தித்து, தமது இருப்பின் தளத்தையுமிழந்து வேரறுந்தவர்களாகி, உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் தம்முடைய இயல்புவாழ்வின் சகல அம்சங்களையும் பறிகொடுத்தவர்களாகி, கண்ணீரும் சோறுமாய் காலம் கழிக்கும் நிலையிலேயே, சுனாமிப் பேரலை அனர்த்தமும் அவர்களை மேலும் நிர்மூலம் செய்துள்ளது.

இந்தச் சூழலில் அவர்களுக்கான புனர்வாழ்வென்பதும், அவர்கள் மண்ணுக்கான புனரமைப்பு என்பதும் ஆழமாகவும், விரிவாகவும் மதிப்பீடு செய்து அதிகப்பட்ட மனிநேயத்துடனும், அக்கறையுடனும் மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்றாக உள்ளதை, இப்பணிகளுக்கென நிவாரணங்களாகவும், நிதிகளாகவும் அள்ளி வழங்கிவரும் சர்வதேச சமூகம் பொறுப்புணர்வுடன் சிந்திக்கவேண்டிய தருணம் இதுவேயாகும்.

யுத்தம் நிறுத்தப்பட்டு, புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு, சமாதானப் பேச்சுவார்த்தைகள்கூட சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் பல கட்டங்கள் நடத்தப்பட்டு, இடைநடுவில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டும்கூட - சமாதானச் சூழல், அரசின் நேர்மையற்றதும், விசுவாசமற்றதும், பல்வேறு உள்நோக்கங்களைக்கொண்ட செயன்முறைகளுக்கப்பாலும், கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றபோதிலும், இந்த மூன்றாண்டுகால அமைதிச்சூழலில் 'பே'ரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான எந்தவொரு நன்மையையும் அரசு செய்யவுமில்லை, சர்வதேச சமூகம் பெற்றுக்கொடுக்கவுமில்லை.

பேச்சுவார்த்தை தொடர்பான பேச்சுக்களில் காட்டிய அக்கறையை மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பான விடயங்களில் காட்டாதது சர்வதேச சமூகம் மீதான தமிழ்மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டது எனலாம்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் சாட்சிகளும் பாதுகாவலர்களுமான நோர்வே அரசும் ஏனைய சமாதான விரும்பிகளான நாடுகளும், அவ்வுடன்பாட்டின் விதிமுறைகளுக்கமைய இலங்கையரசு செயற்படுகிறதா என்பதைக் கண்காணிக்கத் தவறிவிட்டன என்றே கூறவேண்டும்.

உடன்பாட்டில் ஒப்புக்கொண்டமைக்கமைய அரசு எந்த வகையிலும், நேர்மையாகச் செயற்படாததால், சமாதான முயற்சிகளின் ஆரம்பத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பாக பரபரப்பாகப் பிரசாரம் செய்யப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பாக எதுவுமே நடக்கவில்லை.

இந்த மூன்றாண்டுகால எதிர்பார்ப்பு தமிழ் மக்களை அங்குமிங்கும் அல்லாட வைத்ததைத் தவிர வேறெதையும் அவர்களுக்கு வழங்கவேயில்லை. அரசுக்கு அதில் அக்கறையுமில்லை, விருப்பமுமில்லை என்பதே உண்மையுமாகும்.

சமாதானம் தொடர்பான விடயங்களில் தற்போதைய ஆட்சித் தலைமை எவ்வாறு நோர்வே அரசையும், ஏனைய சர்வதேச சமாதான நோக்குடைய நாடுகளையும் 'பேய்க்காட்டி' சமாளித்து காலங்கடத்தி வருகிறது என்பதை அந்தந்த நாடுகளின் ஆட்சித் தலைமைகளின் ஆழ்மனம் நன்கறியும்.


இந்தநிலையில், இப்போது சுனாமிப்பேரலை ஏற்படுத்திய பேரழிவு மேலும் இந்த மக்களின் வாழ்வை நிர்மூலமாக்கியுள்ள நிலையில் அவர்களுக்கான துயரம் எல்லையற்றுப் போயுள்ளது. இந்த அவலத்தைக் கூட அரசியலாக்கி ஆதாயம் பெற நினைக்கும் பேரினவாத ஆட்சியாளர்கள் நிவாரணப் பணிகளில் காட்டும் பாரபட்சம், அவர்களின் மாற்றவே முடியாத 'சுயத்தை'ப் பகிரங்கப்படுத்தியுள்ளது.

சர்வதேச சமூகம் அள்ளிவழங்கும் நிதியுதவியானது, அரசால் நீதியான முறையில் பங்கிடப்படப்போவதில்லை என்பது தெளிவு. எனவேதான் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், தமிழ்ப்பிரதேசங்களுக்கும் புனர்வாழ்வை ஏற்படுத்தவும் புனரமைப்பை மேற்கொள்ளவும், அதற்கான நிதிப்பங்கீட்டை நியாய முறையில் செயற்படுத்தவும் சர்வதேச கண்காணிப்புடன் கூடிய சகலரையும் குறிப்பாக அரசையும், விடுதலைப்புலிகளையும் உள்ளடக்கிய ஒரு பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுதல் அவசியமாகின்றது. இதனை நோர்வே குழுவினர் வலியுறுத்தியுள்ளமை சரியானதே!

ஆனால், அவர்களின் இந்த யோசனையை அரசு ஏற்குமா என்பதே இப்போதைய கேள்வி! அரசின் உள்நோக்கம் நேர்மையற்றதாக இருக்கையில் இதற்கு அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்றே கூறவேண்டும்.

எனினும், விடுதலைப்புலிகளுடனான நோர்வே குழுவினரின் சந்திப்பானது அவர்களுக்குப் பல அறியவேண்டிய செய்திகளை அறிய வாய்ப்பளித்திருக்கும் என்பது உண்மையே...!

சொல்வது நாங்கள், தீர்மானிப்பது அவர்களாகட்டும்.




# மக்கள் மனங்களில் தேசப்பற்றூட்ட பல முனைகளில் செயற்பட்டவர் கிட்டு

## நினைவுதின நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன்

(நவிண்டில்)

சர்வதேசத்துக்கு தமிழர்களது நிலையைக் காட்டவேண்டுமென்ற உன்னத உறுதிப்பாட்டில் நின்று செயற்பட்டு விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரிக்கச் செய்தவர் கேணல் கிட்டு என -

வல்வெட்டித்துறை, தீருவில் திடலில் கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 12ஆம் ஆண்டு நினைவாக நடைபெற்ற நினைவுநாள் நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தமிழினத்தின் உரிமைக்காகவும், சுதந்திரத்துக்காகவும், விடுதலைக்காகவும் தமிழினத்தைத் தாமே ஆளவேண்டுமென்ற தூரநோக்குக் கொண்ட சிந்தனையோடு நாமே எம்மை நிர்வகிக்கவேண்டும். எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம் என அந்த உணர்வோடு கடந்த காலங்களிலே சிங்களப் பேரினவாதப் புறக்கணிப்போடு நாம் எம்மைப்பற்றிச் சிந்திக்கவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அந்தக் காலகட்டத்தில் எல்லாம் எமது மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென்பதற்காக உயிர்நீத்த அந்த மாவீரர்களை நாம் நினைவுகூருகிறோம் எனத் தெரிவித்தார்.

வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச செயலாளர் சூரியகுமார் தனதுரையில் -

சுனாமி அனர்த்தத்தின் விளைவாக எத்தனை பாரிய இழப்புக்கள் வந்தபோதிலும், நாங்கள் உணர்வுகளை இழக்கவில்லை என்பதை நிரூபித்துக் காட்டும் விதமாக இன்றைய நிகழ்விலே நாங்கள் ஒன்றுகூடி நிற்கின்றோம்.

இந்த சுனாமி பேரலையினால் எமது உறவுகளை இழநதோம். எமது வீடுகளை இழந்தோம். எமது உடமைகளை இழந்து, அகதிமுகாமே தஞ்சமெனக் கொண்டோம். இந்த நிலையிலும் கேணல் கிட்டுவின் நினைவுநாளைக் கொண்டாடுகின்றோமென்றால், உணர்வு அழியவில்லை, உணர்வு இன்னமும் மேலோங்கி நிற்கின்றது என்பதைக் காட்டி நிற்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வருகினற சர்வதேச உதவிகள் அனைத்தும் அரசாங்கம் தமது மக்களுக்கு பகிர்ந்தளிப்பதை நாங்கள் பார்க்கின்றோம். அரசாங்கம் தமிழர் தாயகத்தைப் புறக்கணித்துவருகிறது என்பதை நாங்கள் மறந்துவிடமுடியாது. இதேவேளை, எந்தவொரு அரசாங்கத்தின் உதவிகள் எதுவுமில்லாமல் சர்வதேசமே நேரடியாக எங்களுக்கு உதவிகள் வழங்கும் சூழ்நிலையை நாங்கள் உருவாக்குவோம் என்பதைக் கிட்டுவின் நினைவுநாளில் உறுதியெடுத்துக்கொள்வோம் எனத் தெரிவித்தார். (116)

# கதிர்காமத்திலிருந்து பிக்குகள் குழுவொன்று முல்லைத்தீவுக்கு யாத்திரை மேற்கொள்ளவுள்ளது

(கொழும்பு)

கதிர்காமம் திஸ்ஸமகராமவிலிருந்து வண. மாதம்பே அஸஜித தேரோ தலைமையிலான பௌத்த பிக்குமார் குழுவொன்று நாளைமறுதினம் முல்லைத்தீவுக்கு யாத்திரை மேற்கொள்ளவுள்ளது.

யுத்தத்திற்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த இந்த பௌத்த பிக்குமார்கள்குழு ஓரிரு நாட்கள் வன்னியில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்திப்பதோடு, பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் நேரிற்சென்று பார்வையிடவுள்ளனர்.

குறிப்பிட்ட மதகுருமார்குழு நோார்வேயின் விசேட பிரதிநிதி சொல்ஹெய்மை கொழும்பில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த மதவழிபாட்டுத் தலங்களைப் புனரமைப்பதற்கு நோர்வேயின் உதவியையும் நாடியுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் உதவவுள்ளது

(ஆழியவளை)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு தலா மூவாயிரத்து 500 ரூபா பெறுமதியான உடுபுடவைப் பொதிகளை வழங்குவதற்கு யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

எனவே, அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது விபரங்களைத் தத்தமது பாடசாலை வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (122)

# சமுர்த்தி முகாமையாளர்களுக்கு சம்பள மற்றும் பதவி உயர்வுகள்

## சமுர்த்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி முகாமையாளர்களுக்கு சம்பள உயர்வு மற்றும பதவி உயர்வுகள் என்பன வழங்கப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதிலுமுள்ள 1035 சமுர்த்தி வங்கிகளின் பணிகளும கணினி மயப்படுத்தப்படவுள்ளதாக, சமுர்த்தி அமைச்சர் ரோகண திஸநாயக்க தெரிவித்தார்.

வறியமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கபட்ட இந்தச் சமுர்த்தித் திட்டத்தைச் சர்வதேச நாடுகளும் அங்கீகரித்துள்ளன.

புத்தளம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமுர்த்தி முகாமையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண அட்டைகளை வழங்கும் பொறுப்பு சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சின்கீழ் கொண்டுவரப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# மணற்காடு இராணுவமுகாம் புனரமைக்கப்பட்டு வருகிறது!

மணற்காடு வீதி, சவுக்குமரக் காட்டு இராணுவத்தினர், தமது முகாமையும் காவலரண்களையும் புனரமைத்து வருகின்றனர். சுனாமி கடல் அலையினால் உடைந்த கட்டட இடிபாடுகளைக் கொண்டு இராணுவ முகாமிற்கான புதிய பாதையை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கு வாகன உதவிகளை வழங்கிய இராணுவத்தினர் பாடசாலைக் கட்டட இடிபாடுகளையும் தமது முகாம், காவலரண், புதிய பாதைகள் ஆகியன நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்துவதையும் அவதானிக்க முடிகிறது. (91)

## அரசியல் கட்டுரை...

**கே.ரி.கணேசலிங்கம்**

# அரசாங்கம் மீதான நம்பிக்கையை முற்றாக இழந்துவிட்ட தமிழ்மக்கள்!

சுனாமி அனர்த்தம் பெரியளவான அரசியல் தாக்கங்களை இலங்கை முழுவதும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய அரசியல் வீச்சானது வடக்கு - கிழக்கையும், தென் இலங்கையையும் நிரந்தரமான தாக்கத்துக்கும், அரசியல் ரீதியான வேறுபாட்டுக்கும் வழி வகுத்துவிட்டது. அரசாங்கத்தின் பாரபட்சமான அணுகுமுறை இலங்கைத் தீவைச் சூழ்ந்திருந்த முரண்பாட்டை மேலும் அதிகரிக்கச் செய்துவிட்டது போலவே உளளது. தமிழ் மக்கள் சுதந்திர காலத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டனர் என்பதை, சர்வதேச சமூகம் சுனாமியின் பின்னாவது தெளிவாக விளங்கியிருக்கும். ஒரு சில நாடுகளாவது சர்வதேச சமூகத்தில் தமிழர்களுக்கு ஏற்பட்ட பாரபட்சத்தைக் கண்டித்திருப்பதுடன், நிலைமையைத் தெளிவாகப் புரிந்துள்ளன. இந் தச் சந்தர்ப்பத்தில் தமிழீழ விடு தலைப் புலிகள் உருவாக்கியுள்ள நிர்வாகக் கட்டமைப்புகளின் தொழிற்பாடு பற்றியும், அவை மேலும் செயற்படுத்தவேண்டிய பணிகள் பற்றியும் விரிவாக நோக்குவதே இந்தப் பகுதியின் இலக்காகும்.

சுனாமியின் பின்பு இலங்கை அரசாங்கம் மூன்று கோணங்களில் அரசியல் - இராணுவ - பொருளாதார - அணுகுமுறையூடாகச் செயற்பட்டு வருகிறது. அதாவது - தமிழர்களின் அரசியல் உறுதிப் பாட்டையும், தொழிற்பாட்டையும் முறியடிக்க உளவியல் ரீதியான பிரசார தந்திரத்தை மேற்கொண்டு வருகிறது. இது கணிசமாக விடுதலைப் புலிகளின் தலைமையையும், அதற்குப் பக்கபலமாகத் தொழிற்படும் மிதவாத சக்திகளையும், அவர்களின் கோரிககைகளையும் முறியடிக்கத் தீவிர பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இதன் பாதிப்புக்கள் முன்பின் முரண்பாடுகள் கூட சர்வதேசத்தால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனால் உசிதமான, நல்லிணக்கமுடைய, சாத்தியப்படக்கூடிய புரிந்துணர்வுக்கான நெருக்கம் சாத்தியப்பட முடியாத அளவுக்கு மாறிவிட்டது. இரண்டு தரப்பும் புரிந்துணர்வுக்கு பதில் முரண்பட்டுக்கொள்வதைக் காணக்கூடியதாக இருந்து, இதன் வாயிலாக நிவாரணப் பணிகளையோ, மீள்கட்டுமானத்துக்கான, உசித மான வழிவகைகளையோ கைவிட்டு அரசாங்கம் வேறு மார்க்கத்துக்குள் நகர்கிறது.

இரண்டாவது இராணுவ ரீதியான - தந்திரத்தை இரண்டு வழிகளுக்கூடாகப் பிரயோகித்து வருகிறது. ஒன்று - இராணுவத்தை



நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்துவதுடன், தமிழர் பக்கத்தில் வளர்ந்துவந்துள்ள நிர்வாகக் கட்டமைப்பை மட்டுமன்றி, அரசாங்கம் தனது கட்டமைப்புக்குட்பட்ட நிர்வாகத்தின் மீது அதிருப்தி கொண்டதாக விளங்குகின்றதை வெளிப்படுத்தியது. அதனால் தமிழர் தரப்பு வகுத்து வரும் அரசமைப்புக்கான பிரிவுகளைப் பலவீனப்படுத்துவதுடன் தமிழ் மக்களிடமிருந்து அவற்றை விலக்கிவைக்க முயலுதல், அதை அரசாங்கத்தின் சிவில் சேவையூடாக மேற்கொள்ளாது, இராணுவ இயந்திரத்தினூடாக மேற்கொள்ளும் போது, மக்களைக் கட்டுப்படுத்துவது மட்டுமன்றி, கிளர்ந்தெழும் மக்களின் நடவடிக்கைகளை முறியடிக்கவும் உதவுமென அரசு திட்டமிட்டது.

இரண்டாவது அணுகுமுறையாக - அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் கிடைத்துள்ள உதவிகளை இராணுவ உள்கட்டமைப்பை வளர்க்கவும், அதற்கான நவீனரக ஆயுத, தளபாடங்களைக் கொள்வனவு செய்யவும் பயன்படுத்துவதன்மூலம், தமிழ் மக்களை அச்சுறுத்துகின்ற தந்திரத்தைக் கையாண்டு வருகிறது. இதை ஐக்கிய தேசியக்கட்சி பலதடவை சுட்டிக்காட்டியது மட்டுமன்றி, முப்படைகளின் முக்கிய அதிகாரிகள், ஆயுதக் கொள்வனவுக்குப் புறப்பட்டிருப்பது நினைவு கூரத்தக்கது. பல நாடுகள் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் தொகையை விலக்கியதுடன், தடைப்பட்ட கணிசமான நிதி சுனாமியினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் இலங்கை அரசாங்கம் இராணுவ ரீதியான உபாயங்களை முன்னிறுத்தி, போரைப் பிற்போடவும், ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்தவும் திட்டமிட்டு வருகிறது.

மூன்றாவது அம்சமாக - இராஜதந்திரத்தை சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. ஏற்கனவே காணப்பட்ட நிலைமைகளிலிருந்து சற்று வேறுபட்ட விதத்தில், சர்வதேச சமூகத்தை சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பிரயோகித்து வருகிறது. இதனால் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தான் ஒரு சமாதான விரும்பி என்பதைக் காட்டுவதற்கு அத்தகைய தந்திரம் உதவுகிறது. இது ஒருவகை அரசியல் தந்திரமாக அமைந்துள்ளபோதும், சர்வதேச மட்டத்தில் தமிழர்களுக்கு எதிரான அணுகுமுறையைக்கையாளும் அரசியல் தலைமை எனக்காட்ட முயல்வதை உணர முடிகிறது.

எனவே இலங்கை அரசாங்கம் மூன்று கோணங்களில் திட்ட மிட்டு சில வேலைகளைத் தமிழர்களுககும், தமிழர்களின் அரசியல் தலைமைக்கும் எதிராகச் செயற்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழர்களின் நிர்வாகக் கட்டமைப்புகளும் மேற்கொள்ள வேண்டிய விடயங்களை விரிவாக நோக்குதல் பொருத்தமானதாகும். ஏனெனில் அரசாங்கம் தமிழர்கள் மீது கொண்டிருக்கும் பாரபட்சத்தினாலும், பகைமையினாலும் பின்பற்றவேண்டிய அனைத்துப் பொறுப்புக்களிலிருந்து விலகியுள்ளது. இலங்கை அரசாங்கத்துக்குள் உட்பட்டவர்கள் தமிழர்கள் என்ற உணர்விலிருந்து வேறு பிரஜைகளாகக் கருதுகின்ற நிலையானது - தனித்துவமான கட்டமைப்புக்குள் நுழையவேண்டிய தேவையை உறுதிப்படுத்தியுள்ளது. அத்தகைய உறுதிப்படுத்தல்களை ஏற்கவேண்டிய நிலையில் தமிழர் தரப்பும், அதன் நிர்வாக இயந்திரமும் அமைதல் வேண்டும். அதற்கான பூர்வாங்க வேலைகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொண்டாலும், வடக்கு - கிழக்கு முழுவதும் பரவலாக மேற்கொள்ளுதல் அவசியம். மிகவும் நேர்த்தியாகவும், அரசு என்ற அந்தஸ்துடனும், அரசின் பிரஜைகள் என்ற நோக்குடனும் மேற்கொள்ளுதல் வேண்டும். அந்த வகையான பொறுப்புணர்வும், திட்டமிடலும், படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டு, மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

அரசாங்கம் என்பது போலல்லாமல், அரசு என்பது போல் செயற்படுவது மிகவும் சாதகமானதாக சூழலை மாற்றும். கடலாலும், அரசாங்கத்தாலும் அந்நியப்படுத்தப்பட்ட மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அவர்களுடைய நிர்வாகக் கட்டமைப்புகளுக்கும் உரியது. அரசுகள் ஒவ்வொன்றும் பிரஜைகளின் நலன்களை முதன்மைப்படுத்துவதுபோல், பாதுகாப்பைப் பேணுவதுடன் பொருளாதார, சமூக நலச்சேவைகளை விஸ்தரித்துப் பணியாற்றுதல் அவசியமானது.



விடுதலைப் புலிகளின் அரசியல் மட்டத்திலான அணுகுமுறைகளின் வெற்றிகளைப்போல், இராஜதந்திர ரீதியாகவும், சர்வதேச மட்டத்திலான அணுகுமுறையிலும், பாரிய நெருக்கடிகளை முறியடித்துவருவதுபோல், அரசுக்கான மக்களையும், அவர்களின் பொருளாதார, சமூக கட்டுமானங்களையும் மேலும் விரிவுபடுத்த வேண்டும்.

சுதந்திரமான பிரதேசம் போன்று வடக்கு - கிழக்கின் அனைத்துப் பகுதிகளதும் பொருளாதார - சமூகக் கட்டமைப்புக்கான விருத்திகளை மேலும் தீவிரப்படுத்தி, அரசுக்குரிய அந்தஸ்தை நோக்கி நகர்வுகளை மேற்கொள்ளவேண்டும். இலங்கை அரசாங்கம் திட்டமிட்டே தமிழர்களையும், அவர்களது பிரதேசங்களது அழிவுகளையும் நிவர்த்தி செய்யாது செயற்படுவதென்பது - சர்வதேச சமூகத்துக்குத் தெளிவாகிவிட்டது. குறிப்பாக ஐரோப்பிய யூனியன், கண்காணிப்புக்குழு, கனடா மற்றும் பல நாடுகள் அரசின் பாரபட்சமான போக்கை வெளிப்படையாகவே விமர்சித்துள்ளன. இதன் மறுபக்கத்தில் விடுதலைப் புலிகளின் அணுகுமுறைகளையும், நெருக்கடியான நேரத்தில் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்பட்ட விதத்தையும் சர்வதேச சமூகம் கண்டு வரவேற்றுள்ளதுடன், பாராட்டியுமுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்கு பிரதேசத்தினதும், அந்தப் பிரதேசம் சார்ந்த அரசமைப்பினதும் அங்கீகாரத்துக்கான ஏற்பாடுகளாகவே உள்ளன.

அவற்றை இனங்கண்டு செயற்படுத்துவது தற்போது அவசியமான பணியாக அமைந்திருக்கிறது. நிச்சயமாக மாறுதல் ஒவ்வொன்றின்போது இனங்கண்டு செயற்படுவோமாயின், உறுதியான மாறுதலைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் - இலங்கை அரசாங்கத்தின் மீதிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையையும் இழந்து போயுள்ளனர். அரசு ஒன்றின் அவசியத்தைப்பற்றிச் சிந்தித்தவர்கள், மீளவும் இலங்கை அர சாங்கத்துக்குள் அல்ல, இலங்கை அரசுக்குள் வாழலாமெனக் கருதியவர்களையும் சுனாமி அலை அழித்துவிட்டது.

எனவே அரசு தட்டிக்கழிக்கும் பொறுப்புகளைத் தமிழ் மக்களின் அரசியல் தலைமையும், அதுசார்ந்த அரசும் பொறுப்பேற்குமாயின் அடிப்படையில் உள்ள பாதுகாப்பு சித்தாந்தம் உறுதியாகும். ஒன்றிணைந்த மாறுதல் சர்வதேசத்தின் அங்கீகாரத்தையும், கவனத்தையும ஈர்ப்பதுடன் அவை ஒவ்வொன்றையும் கனதியானதாகவும் மாற்றும். அது அரசுக்குரிய வலுவைச் சேர்க்கும்.

---

## பகுதி XVII

**சங்கர்**

### காற்றே நீ எம் கதை கேளாயோ... கடலே நீ எம் நிலை உணராயோ..



பெரிய நீலாவணையில் திடீரெனக் கடல் வற்றியது. பெரிய பெரிய மீன்களை ஆச்சரியத்துடன் பொறுக்கிய ஒரு குடும்பத்தினர், கடல் இரையவும் அச்ச உணர்வுடன் வான் ஒன்றில் ஏறி சம்மாந்துறைப் பக்கமாகச் சென்றுள்ளனர். அப்போது மருதமுனையில் நின்ற பலர் இவர்களைக் கேலி செய்துள்ளனர். இவ்வாறு கேலி செய்தோர் அனைவரும் நீரில் மூழ்கிப்பலி யாகினர்.

இதேவேளை சில நாட்கள் செல்ல இவர்கள் திரும்ப தமது ஊருக்கு வந்தபோது "உங்களுக்கு நிவாரணம் தரமுடியாது. உங்களை இறந்தவர்களின் பட்டியலில் போட்டுவிட்டோம். இறந்தவர்களுக்கு எப்படி நிவாரணம் கொடுப்பது?" என்ற கிராம சேவையாளரின் வினாவைக் கேட்டுத் தலையைப் பிய்த்துக் கொள்கின்றனர் அந்தக் குடும்பத்தினர்.

தென்கிழக்காசியாவிலேயே பம்பாய்க்கு அடுத்ததாக, சன அடர்த்தி கூடிய இடம் காத்தான்குடி. இங்கு ஏற்பட்ட அழிவுகளைப் பார்த்தோம். கடற்கரை வீதியும் துண்டாடப்பட்டு இருந்தது. வைத்தியசாலை இயங்க முடியாத நிலை. சேதமடைந்த கட்டடங்களைப் பார்த்துக் கொண்டு வருகையில் தமது மைத்துனரை இழந்த ஒருவரைச் சந்தித்தேன். அவருடனான உரையாடல் இது -

மௌத்தானவருக்கு பேர் என்ன?

"சரு"

"அவர் என்ன தொழில்?"

"கூலித் தொழில்தான்"

"அப்ப நீங்கள் எங்கை நிண்டனீங்கள?"

"நானும் இந்த அலையில பாதிகப்பட்டனான்

நான் இந்த இடத்தில நிண்டு பார்த்துக்கொண்டு இருக்கேக்கதான், ரெண்டாவது அலை வந்து அடிச்சது. கூடுதலான நேரம் தண்ணிக்குள் போராட்டம், நியாயமான தண்ணியக் குடிச்சிட்டன். மறுகா ஒரு தென்னமரத்தில புடிச்சிட்டன். எனக்கு மேல ஒரு பத்து அடிக்கு மேல தண்ணி. மரத்தில நிண்டு தண்ணி வடிந்த பிறகுதான் இறங்கிப் போனன்.

இதில கூடுதலாக் காப்பத்தப் போன ஆக்களத்தான் தண்ணி கொண்டுபோட்டுது. முதல்ல தண்ணிக்க சிக்கின குடும்பங்களைத் தூக்கிவிட்டு வரக்குள்ள, இளைஞர்கள் கூடுதலா ரெண்டாவது அலையில மாட்டுப்பட்டது இதாலதான். தூக்கப்பட்ட ஆக்களும் இதில போயிட்டினம்." "மொத்தம் எத்தனை பேர் காத்தான் குடியில இழப்பு?" "மரணிச்ச ஆக்களா? நூத்தி ஐஞ்சுபேர அடக்கம் செஞ்சம் தொண்ணூத்தைஞ்சுபேருக்கு மேல காணாமல் போயிருக்கினம். மொத்தமாக இருநூறு பேர இழந்திருக்கம். மூண்டு டிவிசனிலையும்.

மொத்தமா நாலாயிரம் குடும்பங்களுக்கு மேல பாதிக்கப்பட்டிருக்கு. இவங்க தற்காலிக முகாம்களில இருக்காங்க.

அதோட நாங்கள் முக்கியமா யோசிச்சுக் கொண்டிருக்கிற விடயம் மீள் குடியமர்வு.

இப்ப நாங்கள் தண்ணியைச் சுத்திகரிச்சு, மக்களுக்கு விநியோகிச்சுக் கொண்டிருக்கிறம். ஏனெண்டா இது இண்டைக்கு அத்தியாவசியமாப்படுற விசயமா இருக்கு, நோர்வேயில உள்ள போருட் நிறுவனத்தின்ட அனுசரணையில எங்கட மீசான் சிறிலங்கா இதைச் செய்து கொண்டிருக்குது. ஒரு நாளைக்கு இருபதினாயிரம் லீற்றர் தண்ணிய மக்களுக்கு எங்களால வழங்க ஏலும்.

இதின்ட கிளை வந்து காத்தான்குடி முதலாம் குறிச்சியில வீடுகள் கூடுதலா இழக்கப்பட்டிருக்கு"

அங்கு "சுபியான்" என்ற இளைஞன் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் ஒரு தொண்டு நிறுவனமொன்றைச் சேர்ந்தவர் எனத் தெரிந்தது. அவரது பணிகள் பற்றி அவரிடம் கேட்டேன்.

நான் "மீசான் சிறிலங்கா" என்ட N.G.O வில Education Development Director எங்கட பணி பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற தேவைகளைப் பூர்த்திசெய்யிறது.

அமைச்சிருக்கு" என விளக்கினார் சுபியான்.

காத்தான்குடியில் அழிவுகள் நடந்த இடங்களைப் பார்த்துவிட்டு வருகையில், அங்கு பாதிப்புற்ற மக்கள் மண்முனைத் துறைக்கு அண்மையிலுள்ள "ஒல லிக்குளம்" என்னுமிடத்தில் குடி யேற்றப்பட்டுள்ளனர் என்ற செய்தி கிடைத்தது.

ஒல்லிக்குளம் என்றவுடன் 1985 ஆம் ஆண்டு நடந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. அங்குள்ள ஒரு முஸ்லீம் வர்த்தகர் ஒருவர் போராளிகளுக்கு மிகவும ஆதரவாக இருந்தார். போராளிகள் இரவில் நம்பிக்கையுடன் தூங்கும் இல்லங்களில் ஒன்றாக அவரது இல்லம் விளங்கியது. சாப்பாடு "அந்தமாதிரி" இருக் கும் அதே வீட்டுக்கு விசேட அதிரடிப்படையினரும் வந்து செல்வது உண்டு.

ஒருநாள் பிற்பகல் வட தமிழ் புறத்தைச் சேர்ந்த ஒரு போராளி - அந்த வர்த்தகருடன் கதைத்துக் கொண்டிருந்தார். அந்த வேளையில் அதிரடிப்படையில் தமிழர் கொலை மற்றும் சித்திரவதைக்குப் பெயர் பெற்ற பியசேன என்ற அதிகாரி ஒரு ஜீப்பில் மண்முனைத் துறையிலிருந்து ஒல்லிக்குளம் நோக்கி வந்து கொண்டிருந்தார். அதைக் கண்ணுற்ற வர்த்தகர் குறிப்பிட்ட போராளியிடம் "சேட்டின் மேல் பட்டனைப் பூட்டுங்க. உள்ள இருக்கிற ஹோல்சர் தெரியுது. பேசாமப் பதட்டப்படாம சிரிக்க நான சமாளிக்கிறேன்" என்று கூறினார்.

(தொடரும்)

# டெல்கி குடியரசு தின நிகழ்வில் புதிய ரக ஆயுதங்கள் இல்லை



புதுடெல்கியில் இந்த ஆண்டு நடைபெறும் குடியரசு தின விழா கொண்டாட்டத்தின் போது, புதிய போர்த் தளபாடங்கள் அறிமுகம் இருக்காதெனவும், நிகழ்ச்சி நடைபெறும் நேரமும் 45 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இராணுவ அணி வகுப்பை முன்னின்று நடத்திச் செல்லவுள்ள மேஜர் ஜெனரல் தோமஸ் மத்யூ புதுடெல்கியில் தெரிவித்ததாவது -

கடந்த காலங்களில் குடியரசு தின விழாவின்போது புதுப்புது போர்த் தளபாடங்கள் மக்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்ட்டன. அக்னி, பிருதிவி போன்ற ஏவுகணைகளும், அர்ஜுன் மற்றும் டி 90 தாங்கிகளும் சுகோய் - 30 போர் விமானங்களும், நடுவானில் எரிபொருள் நிரப்பும் திறன்படைத்த ஐ.எல். - 78 விமானங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு புதிய போர்த் தளபாடங்களின் அறிமுகம் இருக்காது. இருப்பினும் விமான சாகசங்கள் அனைத்தும் வழமைபோல் இடம்பெறும்.

டென்மார்க் தயாரிப்பான கண்ணி வெடிகளை அகற்றும் புதிய கருவி ஒன்று குடியரசு தின அணி வகுப்பில் இடம்பெறும். இந்தக் கருவி 15 தொன் நிறையுடையது. 3.5 மீற்றர் அகலம் கொண்ட பாதையில் 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு கண்ணி வெடிகளைக் கண்டுபிடித்து அழிக்கும் திறன் கொண்டது.

அதேபோல் 20 நிமிடத்தில் 50 மீற்றர் தூரத்துக்கு அலுமினிய பாதை அமைக்கும் ஒரு கருவியும் அணி வகுப்பில் இடம்பெறும். எப்படிப்பட்ட சிக்கலான இடத்திலும் இந்தக் கருவி பாதையை அமைத்துவிடும். அலுமினிய பாதை பல தொன் நிறை கொண்ட தாங்கிகள் கூட கடந்து செல்லும் அளவுக்குத் திறன் கொண்டதாக இருக்கும்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஏவுகணைகளும் இந்த ஆண்டு அணி வகுப்பில் இடம்பெறும். விமானப் படை அணிவகுப்பில் சுகாய் - 30, ஜக்குவார், மிக் - 17 உள்ளிட்ட 25 வகையான விமானங்கள் இடம் பெறும்.

சு - 30 விமானங்கள் வானில் நடத்தும் சாகச நிகழ்வும் இடம்பெறும். கடந்த காலங்களில் குடியரசு தின கொண்டாட்டம் இரண்டரை மணி நேரம் நடந்துவந்துள்ளன. இந்த ஆண்டு இது ஒரு மணி நேரம் 38 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், இராணுவ விமானப் படை சாகசங்களில் எந்தக் குறைப்பும் இருக்காது. அலங்கார வாகன அணி வகுப்புகள், மாணவர்களின் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையில் மட்டுமே சிறு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. முன்பு இராணுவம் சார்பாக ஆறு தாங்கிகள் அணிவகுப்பில் இடம்பெறும். இது மூன்றாக தற்போது குறைக்கப்பட்டுள்ளது. இந்த நேர குறைப்புக்கும் சுனாமி பேரழிவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பார்வையாளர்களின் விருப்பத்தைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இராணுவ வீரர்கள் பொலிஸார், துணை இராணுவ படையினர், முன்னாள் இராணுவ வீரர்கள், என்.சி.சி மாணவர்களின் அணி வகுப்பு வழக்கம் போல் நடைபெறும்.

இராணுவ அணி வகுப்பு மரியாதையை ஜனாதிபதி அப்துல் கலாம் ஏற்றுக்கொள்கிறார். விழாவின் சிறப்பு விருந்தினராக பூட்டான் மன்னர் ஜிக்மே சிங்மே வாங்சுக் கலந்து கொள்கிறார். குதிரைப்படை அணி வகுப்பு, மோட்டார் சைக்கிள் வீரர்களின் சாகசம், வீர தீர விருதுபெற்ற சிறுவர்களின் யானை பவனி ஆகியனவும் இடம்பெறும் இவ்வாறு மேஜர் ஜெனரல் தோமஸ் மத்யூ கூறினார்.

## சுனாமி அனர்த்தத்தில் அகப்பட்டவர் 25 நாட்களின் பின் உயிருடன் மீட்பு!

சுனாமி பேரனர்த்தத்தில் அகப்பட்டு உயிர் தப்பியவரை 25 நாட்களின் பின்னர் இந்தியக் கடற்படையினர் அந்தமான் - நிகோபரிலுள்ள சிறிய தீவில் மீட்டுள்ளனர்.

மைக்கல் மாங்கல் என்பவரே நிகோபரின் பிலோ பஞ்சா எனும் சிறிய தீவிலிருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டவராவார். இவர் மீட்கப்படும் வேளை மிகவும் தளர்ந்த நிலையிலும், சிறு காயங்களுடனும் இருந்ததாகக் கடற்படை அதிகாரியான மேத்தா தெரிவித்தார்.

மீண்டும் கடல் தன்னை அடித்துச் செல்லாம் என்ற அச்சத்தினால், பல நாட்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் மரத்திலேயே இருந்ததாக மாங்கல் தெரிவித்தார்.

# உலக நோக்கு

## ஆசியாவை தாக்கிய சுனாமியால் அமெரிக்க கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது!

(மியாமி)

சுனாமியால் அமெரிக்க நாட்டின் கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இது நிபுணர்களை ஆச்சரியப்படவைத்துள்ளது.

சுனாமியால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்திருப்பதாகக் கூறப்பட்டு வருகிறது. இது குறித்து நிபுணர்கள் ஆய்வுசெய்து வருகின்றனர்.

ஆசியாவில் ஏற்பட்ட சுனாமியால் அமெரிக்காவில் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்திருப்பதாகத் தற்போது தகவல் வெளிவந்துள்ளது.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள கிணறுகளில் 4 அங்குலம் அளவுக்கு நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனை வடக்கு புளோரிடாவிலுள்ள நீர் வளத்துறை நிபுணர்களும், நீர் நிர்வாகத்துறை அதிகாரிகளும் கண்டுபிடித்தனர்.

ஆசியாவில் இருந்து சுமார் 12 ஆயிரத்து 800 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் சுனாமியின் தாக்கம் எதிரொலித்திருப்பது நிபுணர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இது குறித்து நிபுணர் ஜோன் முல்லிசன் கூறியதாவது -

"இது கடந்த மாதம் 26 ஆம் திகதி சுமாத்திராவில் ஏற்பட்ட நில நடுக்கம், சுனாமி பேரலை காரணமாக நிகழ்ந்திருக்கும் என்று கருதுகிறோம். பொதுவாக புளோரிடா பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் மெதுவாகவே உயரும். ஆனால், தற்போது திடீரென உயர்ந்திருப்பது வழக்கத்துக்கு மாறானது. சுனாமியின் வேகத்தில் இது ஏற்பட்டிருக்க முடியும் எனத் தெரிவித்தார்.

மற்றொரு அதிகாரி ரொண்டி சுமித் கூறுகையில் -


"உண்மையிலேயே இது ஆச்சரியமான ஒன்று. நாங்கள் இதுவரை இப்படிக் கண்டதில்லை." என்றார். இதனால், புளோரிடா பகுதிக்கு எந்தவித பாதிப்பும் இல்லையென்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

புளோரிடாவைப் போலவே அமெரிக்காவின் மற்றைய மாநிலங்களிலுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்திருப்பதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

## ஒசாமா பின்லேடன் குறித்த புத்தகம் அமெரிக்காவில் வெளிவரவுள்ளது!

(வாஷிங்ரன்)

ஒசாமா பின்லேடன் மற்றும் அல் - கொய்டா தலைவர்களின் சிந்தனைகளைத் தொகுத்து அமெரிக்காவில் புத்தகமொன்று விரைவில் வெளியாகவுள்ளது.



இது குறித்து டபுள்டே பதிப்பகத்தின் தகவல் தொடர்பாளர் சுஜன்னி ஹெர்ஜ் கூறியதாவது -

இந்தப் புத்தகத்தில் அல் கொய்டா இயக்கத்தின் போராட்ட வரலாறு. ஒசாமாவின் பேட்டி மற்றும் அவரது வலதுகரமான அல் ஜவாகிரியின் கருத்துக்கள் உட்பட பல விபரங்கள் அடங்கும். இதன் மூலம் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கித் தவித்தவர்களை நாங்கள் காயப்படுத்த விரும்பவில்லை. ஆனால், அமெரிக்கர்கள் தங்கள் எதிரிகளின் உண்மையான பலம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டு போராட இது உதவியாக இருக்கும். இந்தப் புத்தகத்தின்மூலம் கிடைக்கும் லாபம் முழுவதும் நன்கொடையாக வழங்கப்படும்.

இவ்வாறு சுஜன்னி ஹெர்ஜ் கூறினார். இதேவேளை, அல் கொய்டா கிளர்ச்சிவாதிகளால் தாக்கப்பட்டு உறவினர்கள் மற்றும் நண்பர்களை இழந்தவர்கள் - அமெரிக்காவில் வெளியாகவுள்ள இந்தப் புத்தகத்திற்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஆசியா மற்றும் ஜோர்தானில் ஏற்கனவே வெளியான புத்தகங்களின் அடிப்படையில் இந்த ஆங்கில புத்தகம் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## பிரச்சினைக்குரிய நாடுகளில் ஈரான் முதலிடம் வகிக்கிறது!

### அமெரிக்க துணை ஜனாதிபதி தெரிவிப்பு

அமெரிக்காவின் பிரச்சினைக்குரிய நாடுகளின் பட்டியலில் ஈரான் முதலிடத்தில் உள்ளதாக அமெரிக்க துணை ஜனாதிபதி டிக்செனி தெரிவித்துள்ளார்.



இரண்டாம் முறையாகவும் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு சற்று முன்பாக அவர் செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -


ஈரானின் அணுத் திட்டம் தொடர்பான பிரச்சினைக்கு இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு அதனைத் தீர்ப்பதே முதன்மையான வழியாகும். மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மீண்டுமொரு போர் ஏற்படுவதனை அமெரிக்கா விரும்பவில்லை.

ஆனாலும், ஈரான் தொடர்ந்தும் தனது அணுத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமானால் அமெரிக்கா ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் மூலம் அந்த நாட்டிற்கெதிராக பொருளாதாரத் தடையை விதிக்கும்.

தனது எதிர்கால பாதுகாப்பை கருத்திற்கொண்டு ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தலாம்.

சதாம் ஹுசைனின் ஆட்சிக் காலத்தின் பின்னரான ஈராக்கை எவ்வளவு காலத்திற்குள் கட்டியெழுப்புவதென்பது தற்போதுள்ள நிலைமைகளில் தவறான மதிப்பீடாகும். அமெரிக்கப் படைகள் ஈராக்கிற்குள் சென்றபின்னர் ஈராக்கியர்கள் தமது சொந்த விவகாரங்களை ஏற்படுத்திக் கொள்வதில் மிகவும் மெதுவாகச் செயற்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.


## புஷ்ஷை சாத்தானாக எண்ணி கல் எறிந்த ஹஜ் யாத்திரிகர்கள்!



சவுதி அரேபியா மினாவில் சாத்தான் மீது கல் எறியும் நிகழ்ச்சி எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி அமைதியாக நிறைவடைந்தது. ஆனால், இந்தக் கல் எறிதல் நிகழ்ச்சியை அமெரிக்க அதிபர் புஷ் உட்பட சில உலகத் தலைவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாக கருதினோம் என அதில் பங்கேற்றவர்கள் கூறினர்.

இஸ்லாமியர்களின் ஐந்து கடமைகளில் ஒன்று ஹஜ் புனித பயணம். கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் லட்சக் கணக்கானோர் புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். பயணத்தின் இறுதி நிகழ்வாக சாத்தான் மீது கல் எறியும் நிகழ்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது. சவுதி அரேபியாவின் மினாவில் உள்ள சாத்தான் தூண் மீது ஹஜ் பயணம் மேற்கொண்டவர்கள் பலரும் கல் எறிந்தனர்.

அவர்கள் பலர் கூறுகையில் - சாத்தான் மீது கல் எறியும் நிகழ்ச்சியின்போது எங்களுக்கு அமெரிக்க அதிபர் புஷ், இஸ்ரேல் பிரதமர் ஷரோன், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் உட்பட சில உலகத் தலைவர்களே ஞாபகத்திற்கு வந்தனர். காரணம் இவர்கள் அனைவரும் இஸ்லாமியர்களுக்கும், இஸ்லாமிய நாடுகளுக்கும் எதிராகச் செயற்பட்டு வருகின்றனர்.



எங்களது கோப உணர்ச்சியை நேரடியாக நாங்கள் காட்ட இயலாது என்பதால், சாத்தான்களாக அவர்களை நினைத்து கல் எறிந்தோம் என்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கல் எறியும் நிகழ்ச்சியின் போது ஏற்படும் நெரிசலால் உயிரிழப்புகள் ஏற்படுவது வழக்கம். கடந்த ஆண்டு நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 250 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஆனால் இந்த ஆண்டு எந்த அசம்பாவித சம்பவங்களும் இல்லாமல் அமைதியாக நிகழ்ச்சி நடந்தமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கடல்வள டிப்ளோமாதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கடல்வள டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவது தொடர்பாக அவசர சந்திப்பு நாளை காலை 10 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள தமிழீழ கல்விக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களின மீன்பிடித் தொழில் மீள் கட்டமைப்புத் துறையில் தொழில்வாய்ப்பு பெற்றுக்கொடுப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் தற்போது பாடசாலைகளில் கடல்வள பாட ஆசிரியர்களாக பணியாற்றுவோரும், ஏனையோரும் தவறாது கலந்துகொள்ளும்படி தமிழீழ கல்விக்கழகப் பொறுபபாளர் வெ.இளங்குமரன் கேட்டுள்ளார்.

# ஒஸ்ரிய வெளிவிவகார அமைச்சர் 3 நாள் விஜயமாக வருகிறார்!

ஒஸ்ரிய சமஷ்டி வெளிவிவகார அமைச்சின் டொக்டர் உர்சுலா பிளாஸனில் மூன்றுநாள் விஜயமாக இன்று கொழும்பு வரவுள்ளார்.

ஒஸ்ரிய அரசாங்கத்தால் இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்காக மேற்கொள்ளப்படும் உதவிப் பணிகள் குறித்து ஆராயவுள்ள இவர் நிவாரண உதவிகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆராயவுள்ளார்.

அத்துடன், இவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுநடத்துவார். அத்துடன் இவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட காலிப் பிரதேசத்துக்கு விஜயம்மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நிவாரணப் பணியில் புலிகளை இணைப்பதை ஏற்கமுடியாதாம்

## ஜே.வி.பி தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வடக்கு - கிழக்குப் பகுதியில் பொது மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் விநியோகத்தில் விடுதலைப் புலிகளையும் இணைத்துக் கொள்வதனை ஏற்றுக்கொள்ள முடியாதென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஒழுங்கான ஒரு அரசாங்கம் அதன் உத்தியோகபூர்வ செயற்பாடுகளில் ஆயுதம் தாங்கிய குழுவொன்றை இணைத்துக்கொள்ள முடியாது. அவ்வாறு அவர்களை அரசாங்கம் இணைத்துக் கொள்ளுமாக இருந்தால், அந்தக் குழுவை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாக அமைந்துவிடும்.

இதனையும் மீறி அரசாங்கம் அவர்களை இணைத்துக்கொண்டால் ஜே.வி.பி எந்த வகையிலும் அதற்கு உடன்படமாட்டாது. சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான புனர்நிர்மாண உதவிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமெனவும் 'அவர் தெரிவித்தார்.

### நேற்றுமட்டும் 7 விமானங்களில் உதவிப்பொருட்கள் வந்தன

சுனாமியின் பின்னர் இலங்கைக்கு இதுவரை 297 விமானங்களில் நிவாரணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. இதில் 40 இற்கு மேற்பட்டவை அமெரிக்க விமானங்களாகும். நேற்று கட்டுநாயக்கவை வந்தடைந்த 7 விமானங்களில் பெரும்பாலும் வாகனங்களே எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றில் அதிகமானவை அம்புலன்ஸ் வாகனங்களாகும். இவை இத்தாலி, ஸ்பெயின் மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டதாக தெரியவருகிறது.(01)

# நோர்வே தூதுக் குழுவினருடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பிற்பகல் நோர்வே தூதுக் குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினா.

இந்தச் சந்திப்பு நோர்வே தூதரகத்தில் நடைபெற்றுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள தென் இலங்கையின் அரசியல் நிலவரம், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் நிவாரணப் பணிகள் போன்ற விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஜோசப் பரராஜசிங்கம் இது குறித்துத் தெரிவிக்கையில் -

அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்து இதன் மூலம் இராணுவத்தினர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இணைப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கை இராணுவத்தில் நூறு வீதமானவர்கள் சிங்களவர்கள். அது மட்டுமல்ல கடந்த 20 ஆண்டு காலமாக இராணுவத்தின் கையில் தமிழ் மக்கள் அகப்பட்டு, துன்பங்கள் துயரங்களை அடைந்தார்கள்.

எனவே, அரசு தற்போது கொண்டு வந்த சட்டத்தின் மூலம் இந்த இராணுவ அதிகாரிகள் தேவை ஏற்படும் பட்சத்தில் அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகள்கூட இராணுவத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் உறுதிப்படுத்துகின்றது.

இந்தச் சட்டத்தின் மூலம் தேடுதல் நடவடிக்கைகள். அதே நேரம் தேவை ஏற்படும் பட்சத்தில் ஒரு வீட்டின் உள் கதவையோ, வெளிக் கதவையோ, ஜன்னல்களையோ உடைத்துத் தேடுதல் முயற்சியில் ஈடுபடலாம்.

வாகனங்களைத் தேடுவது, அதேநேரம் கப்பல்களை மறித்துத் தேடுவது மற்றும் ஆட்களைக் கைது செய்வது போன்றவைகள் இந்தச் சட்டத்தில் இடம்பெறுகின்றன. மீண்டும் அரசு இந்த சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி இராணுவத் திட்டத்தை நோக்கிச் செல்கின்றது. இவற்றை நாங்கள் கடுமையாக எச்சரிக்கின்றோம்.

எனவே, நோர்வே அரசாங்கம், சர்வதேச அரசுகளை வற்புறுத்தி இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நோர்வே தரப்பினருக்கு கூறியுள்ளோம்.

இந்த சுனாமிப் பேரலைகள் காரணமாக சகல நாடுகளும் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் நோர்வே அரசாங்கம் சமாதான முயற்சிகளை மறந்துவிடக்கூடாது என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்தோம் என்றார்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பதமினி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன், கஜேந்திரகுமார், பொன்னம்பலம், ஜோசப் பரராசசிங்கம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கு பற்றினர்.

## 26 ஆம்...

இந்த இயற்கையின் கோரத் தாண்டவத்தால் இடம்பெயர்ந்த எமது மக்கள் தமது உறவுகளையும், வாழ்விடங்களையும் இழந்த பிரிந்த தமது உறவுகளின் சோகத்துடன் மனது பேதலித்த நிலையில் மீண்டும் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் இருந்து வருகிறார்கள்.

இந்தப் பேரனர்த்தம் காரணமாக தமிழர் தாயகத்திலும் ஏனைய தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் முகமாக எதிர் வரும் 26.01.2005 ஆம் திகதி தேசிய துக்கதினமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்படுகிறது. இந்நாளில் தமது அன்புக்குரியவர்களையும், உறவுகளையும் இழந்து துடிக்கும் எமது உறவுகளின் சோகத்தில் பங்குகொள்வோம்.

மூர்க்கமாக எழுந்த கடலலைகளில் சிக்கி எமது உறவுகள் உயிர் நீத்த அந்தக் கணத்தில் தமிழர் தேசத்திலும் புலம்பெயர்ந்து தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் நினைவுச்சுடரேற்றி இழந்துபோன உறவுகளை நினைவில் நிறுத்துவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுனாமி...

யானவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். எமது இந்த ஆயுதக் கொள்வனவு வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின்படியே மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, விடுதலைப் புலிகளின் இந்தக் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானதெனவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

ஜே.வி.பிக்குத் தெரியாமல் அரசாங்கம் மேற்கொண்டு வரும் சில நடவடிக்கைகளால் அதிருப்தி அடைந்திருக்கும் அந்தக்கட்சியின் அரசியல் குழுவே இந்த முடிவை எடுத்துள்ளது.

அமைச்சர்களின் தொகையைத் தமக்குத் தெரியாமல் அரசாங்கம் அதிகரித்தமை, நோர்வேத் தரப்பினரைத் தமக்குத் தெரியாமல் சமாதான முயற்சிகளுக்காக மீண்டும் அழைத்தமை உட்பட அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகள் கூட்டணி உடன்படிக்கையை மீறுவதாக அமைந்திருக்கிறதென ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

எனினும், ஜே.வி.பியின் குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் தரப்பில் உரிய பதில்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (01)

## கிளிநொச்சி...

நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த ஜான் பீற்றர்சன் புலிகளுடனான சந்திப்பு மற்றும் உதவி நிவாரணப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடமும், இந்த விடயங்கள் தொடர்பாக அவர் நேற்று பேச்சு நடத்தினார்.

அந்தப் பேச்சுக்களின் போது நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவது குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

### வட - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால்

# ஆசிரிய வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை பட்டதாரிகளிடமிருந்து கோரவிருப்பதாகத் தெரியவருகிறது.

அடுத்த சில நாட்களில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலகத்தினால் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படவுள்ளது. இதற்கான அனுமதியை கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களத்துக்கு கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த அனுமதியின்படி ஏற்கனவே மேல்மாகாணசபையும், ஊவா மாகாணசபையும் ஆசிரியர் விண்ணப்பங்களைக் கோரியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள செயலாளரால் கோரப்படும் விண்ணப்பத்துக்கு ஏற்கனவே பட்டதாரி பயிலுனராக நியமனம் பெற்றவர்களும் ஏனைய பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம் எனத் தெரியவருகிறது.

இதேவேளை, பட்டதாரி பயிலுனர்களாக நியமிக்கப்பட்டவர்கள் 9 மாத காலத்தின் பின்னர் நிரந்தர நியமனத்துக்காக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி பட்டதாரி ஆசிரிய வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்போது பட்டதாரி பயிலுனர்களும் விண்ணப்பிக்கவேண்டும் எனவும் தெரியவருகிறது.

## வெளிநாட்டு...

எனவே, இலங்கைக் கடற்படையை மீளக் கட்டியெழுப்புவதற்குப் புதிய கடற்படைக் கப்பல்களைக் கொள்வனவு செய்யவேண்டுமென்றும் -

இதற்காகவே சர்வதேச நாடுகள் சுனாமி அழிவுகளுக்காக வழங்கும் உதவியில் ஒரு பகுதியை ஒதுக்கித்தருமாறு கோரியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, கடந்த மாதம் 22 ஆம் திகதி கடற்படைக்கு 358 கோடி ரூபா செலவில் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் கப்பல் கட்டும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கைச்சாத்திட்ட இந்த ஒப்பந்தத்தின்படி - 300 கோடி ரூபா செலவில் பத்து அதிவேக தாக்குதல் படகுகளும், 58 கோடி 50 லட்சம் ரூபாவுக்கு துருப்புக் காவி கப்பல் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டது.

இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னரே சுனாமியால் கடற்படை பேரழிவுகளைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆத்மசாந்திப்...

ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்தப்படும் சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த மக்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு சகலமக்களுக்கும் அந்தப் பகுதி மக்கள் ஒலி பெருக்கி மூலம் நேற்று அழைப்பு விடுத்தனர்.

இந்த நிலையில் நேற்று அவ்விடத்திற்கு வருகை தந்த விசேட அதிரடிப்படையினர் இவ்வாறான நிகழ்வுகளைத் தன்னிச்சையாக நடத்த முடியாதெனவும் இதற்கு அதிரடிப்படை அதிகாரியின் அனுமதி பெறவேண்டுமெனவும் தெரிவித்தனர்.

அத்துடன் இறந்த மக்களுக்கான இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கான அனுமதியை அதிரடிப்படை அதிகாரியிடம் பெற்றுத்தருவதாகவும் கூறிச் சென்றுள்ளனர்.

சுனாமி பேரனர்த்தத்தால் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களுக்கென தம்மால் நடத்தப்படவிருந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையைக் கூட அதிரடிப்படையினரின் அனுமதியைப் பெற்று நடத்த வேண்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## சுனாமி நிவாரண...


சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, செயலணிக் குழுத் தலைவர் நரேன், தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் திலகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் அரைமணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் சுனாமி கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட பேரழிவுகள் தொடர்பாகவும், உடனடியாக மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகள் தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் மீள்கட்டுமானப் பணிகளை விரைவாக மேற்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பையடுத்தே நோர்வே உயர்மட்டக் குழுவினர் முல்லைத்தீவில் ஏற்பட்ட பேரழிவுகள் குறித்து நேரில் பார்வையிட்டனர்.

# மரண அறிவித்தல்



## பிறைசூடி அருமைத்துரை

உரும்பிராயைச் சேர்ந்த பிறைசூடி அருமைத்துரை ஜேர்மனியில் காலமானார். இவர் பிறைசூடி - சரஸ்வதி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கனகசபை - திலகவதி தம்பதிகளின் மருமகனும் ஆனந்தியின் அன்புக்கணவரும் விதுரா, சரண்யாவின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.01.2005) ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க.கோபால்
(சகலன்)

பொன்னாலை,
சுழிபுரம்.

(1038)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.